# அறுவை மருத்துவத்தில்
# நோயாளியைப் பரிசோதிக்கும் முறைமை

ஆக்கியோன்

**டாக்டர் க. சு. உத்தமராயன்**, எச்.பி.ஐ.எம்.,
முந்நாள் இந்திய மருத்துவத்துறை இயக்குநர்,
தலைவர், சித்தர் அறிவியல் வளர்ச்சிக் குழு,
சென்னை-600029.

©
தமிழ்நாடு அரசு
1981

தமிழ்நாடு அரசு சித்தர் அறிவியல் வளர்ச்சிக் குழுவால்
பாட நூலாக ஒப்புதல் பெற்று இந்திய மருத்துவத்துறையால்
வெளியிடப் பெற்றது.

# முன்னுரை

சித்த மருத்துவத்தில் ஏற்கெனவே இயற்றி வெளியிடப்பட்டு பாடநூலாக இருந்துவரும் 'அறுவை மருத்துவம்' என்ற நூலுக்குத் துணையாகப் பயிற்சி நூலொன்று தேவை என்பதை மனதிற்கொண்டு இந்த அறுவை மருத்துவத்தில் நோயாளியைப் பரிசோதிக்கும் முறைமை என்ற நூலை எழுதி வெளியிட முனைந்துள்ளேன்.

இந்த நூலில் மருத்துவம் பயிலும் மாணவர்கள் தம்தம் ஐம் பொறி புலன்களைச் சரியான நிலையில் வைத்துக் கொண்டு நோயாளியின் அகப்புறப் பாகங்களைப் பரிசோதிக்கும் முறைகளும் ஒவ்வொரு நோயிலும் மிக முக்கியமாய்ப் பார்வையிட்டும் கேட்டும் அறிய வேண்டிய பட்டியல்களும் கொடுக்கப்பட்டுள்ளது. இந்நூலின் வழி பரிசோதனை செய்தால் எல்லா நோய்களையும் கணித்து உறுதிப்படுத்த முடியும். இது அறுவை மருத்துவத்திற்கு வெற்றி தரும் சாதகமாக இலங்கும் என்பது எனது தேற்றம்.

இந்நூலை உடனிருந்து பரிசோதனை வழிவகைகளை வகுக்கவும், எழுதவும், பிறகு அச்சியற்றி வரும் காலத்தில் அச்சுப்படிகளைத் திருத்தவும் உதவிய டாக்டர் வி. விசுவநாதன், எல்.ஐ.எம். சித்தர் அறிவியல் வளர்ச்சிக் குழுவின் முன்னாள் தனி அலுவலர் அவர்கட்கு என் உளமார்ந்த நன்றி உரித்தாகுக.

இந்நூலை அச்சியற்ற ஆர்வத்துடன் முனைந்து செயல்பட்ட தமிழ்நாடு அரசு, மக்கள் நலத்துறை செயலர் உயர்திரு எம். முராரி, ஐ.ஏ.எஸ்., அவர்களுக்கும், இந்திய மருத்துவத்துறை இயக்குநர், டாக்டர் (குமாரி) அ. நீலாவதி அம்மையாருக்கும், இதனை நல்ல முறையில் அச்சிட்டு உதவிய தமிழ்நாடு அரசு எழுதுபொருள் அச்சுத்துறை இயக்குநர் அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றி உரித்தாகுக.

திருவல்லிக்கேணி,
சென்னை-600 005.

க. சு. உத்தமராயன்
28-10-1979

37-B 1-A

# அறுவை மருத்துவத்தில் நோயாளியைப் பரிசோதிக்கும் முறைமை.

## அத்தியாயம் I.

### 1. நோய்க் குறிப்பேடு எழுதும் பொது முறை.

ஒரு மருத்துவ மாணவனுக்கு ஒரு நோயாளியின் நோயைச் சர்வரக் கண்டுபிடித்து மருத்துவம் செய்யும் வழிவகைகளைச் சரியாகக் கணித்தறியப் போதிய பயிற்சி அளித்தல் முக்கியமாகும். அவ்வாறு ஒருவனுடைய நோயைக் கண்டுபிடிக்க முதலாவதாக நோயாளியை முறையாக வினவி, அவன் கூறும் பதில்களைக் கொண்டு அவனுக்குண்டாகியுள்ள நோயின் வரலாறு, அவனுடைய சொந்த வரலாறு அவனுடைய குடும்பத்தாரின் நோய் சம்பந்தமான வரலாறு முதலிய விவரங்களைக் குறிப்பெடுத்தல் வேண்டும். அடுத்தபடியாக நோயாளியைப் பார்வையிட்டுப் பரிசோதித்த பின்னர் அவனது பிணிபட்ட இடத்தைத் தொட்டும், அழுத்தியும், இதமாகத் தட்டியும் பரிசோதிக்க வேண்டுவது இன்றியமையாததாகும். அவ்வாறு பரிசோதனை செய்யும்போது இயல்புக்கு வேறுபட்ட குறி குணங்கள் காணப்பட்டால் அவைகளை முறையாகக் குறிப்பு எடுத்து வைத்துக்கொள்ளப் பழகிக் கொள்ள வேண்டும். எந்த ஒரு குறிகுணத்தையும் விடாமல் குறிப்பெடுத்தல் மிக்க அவசியமாகும். அங்ஙனம் குறிப்பு எடுத்துக் கொண்டபின் 'தற்காலிக நோய்க்கணிப்புச்' செய்ய இயலும். அதன்பின் சிறப்புப் பரிசோதனைகளும், நாடிமுதலான எண் வகைத் தேர்வுகளும், ஏழு உடற்கட்டுகளின் தேர்வுகளையும் குறைவறச் செய்து குறிப்புகள் எடுத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதால் சரியான நோயைக் கண்டறிய இயலும். அதன்பின், மருத்துவம், நோய் தீர்வில் காணப்படும் முன்னேற்றம் முதலியவைகளை அன்றாடம் குறித்து வரல் வேண்டும். நோயாளியின் நோய் தீர்ந்தபின் முடிவு குறித்தும், குறிப்பெழுதி, நோய்க்குறிப் பேட்டைப் பத்திரப் படுத்தல் வேண்டும். ஆகவே,

1. நோயாளியை வினுதல் அல்லது வரலாற்றைக் குறித்தல்.
2. உடலின் வெளிப்புறப் பரிசோதனைகள்.
3. தாற்காலிக நோய்க் கணிப்பு.
4. சிறப்புப் பரிசோதனைகள்.
5. நாடி முதலிய எண்வகைத் தேர்வும், எழுவகை உடற் கட்டுகளின் தேர்வுகளும்.
6. சரியான நோய்க்கணிப்பு.
7. மருத்துவம்.
8. நோய் தீர்வின் முன்னேற்றம்.
9. முடிவு.

என, ஒன்பது விஷயங்களில் மனத்தைச் செலுத்தி எல்லாக் குறிப்புகளையும் நோய்க் குறிப்பேட்டில் எழுதி வைத்தல் வேண்டும். அவைகளின் விரிவை ஒன்றன்பின் ஒன்ருய் ஆய்வோம்

(1) நோயாளியை வினுதல் அல்லது வரலாற்றைக் குறித்தல்:

(அ) நோயாளியை, அவனுடைய நோயைப்பற்றிய குறிப்புக்களை எழுதுமுன்னம் அவனுடைய பெயர், அவனுடைய சமயம், இனம், பால், வயது, தொழில், இருப்பிடம் முதலியவைகளைக் கேட்டுக் குறித்துக் கொள்ளல் வேண்டும். அவ்வாறு குறிப்பெடுத்தலில் முக்கிய நோக்கமும் உபயோகங்களும் ஒரு சில இங்கு குறிப்பிடப்பட்டுள்ளன. ஒவ்வொருவர் அனுபவத்தில் வேறு உண்டேனும் கொள்க.

பெயர்.—பெரும்பாலும் பாலையும் சமயத்தையும் இனத்தையும் கண்டு கொள்ள உதவும். சில சமயத்தில் அவர்களுடைய இருப்பிடத்தையும் ஊகிக்க இயலும்.

சமயம், இனம்.—முகமதியர்கள் அவர்களுடைய சமயச் சடங்காக ஆண்குறியின் முன்பாகத்தின் மேல் தோலை அறுவை செய்து கொண்டிருப்பர். அவ்வாறு சிறுவயதிலேயே செய்து கொள்வதால் அவர்களுக்கு இருவகையான தோல் தடைப்புண் (நிறுத்தமணி நோய், இறுக்கமணி நோய்) (Paraphymosis, Phymosi ) தோலுட்புறப் புண் போன்ற நோய்களும் ஆண்குறிப் புற்று நோயும் தோன்றுவதில்லை.

பால்.—பிறப்புறுப்புகளில் சிறப்பாகத் தோன்றக் கூடிய பல பிணிகளன்றி மற்ற பல நோய்கள் ஆண்பாலார்க்கே மிகுதியாகக் காணப்படுதலும், சில நோய்கள் பெண்பாலார்க்கே பெரும்பாலும் காணப்படுவனவாகவும் உள்ளன. இதை அனுபவத்தில் அறியலாம். உதாரணமாக இரத்தம் சொரியும் நோய் ( Haemophitia ) ஆண் பாலார்க்கே மிகுதியாகக் காணப்படுகின்றது. பாலுணர்வு வலிப்பு ( Hysteria ) நோய் பெரும்பாலும் பெண்களுக்கே ஏற்படுகின்றது.

வயது.—சிறுபிள்ளைகளுக்கு, கக்குவான் இருமல், மாந்தம், இளம்பிள்ளை வாதம் ஏற்படுவது சகஜம். அப்பிணிகள் வயது வந்தவர்களுக்கு ஏற்படுவதில்லை. வயது வந்தவர்களுக்குத் தோன்றக் கூடிய என்பு மூட்டு வாத நோய்கள், சிறு பிள்ளைகளுக்கு எற்படுவது இல்லை. பிளவு பட்ட உதடும், பிளவு பட்ட அண்ணமும் பிறவியிலேயே உண்டாகும் நோய்கள். வயது வந்தவர்களுக்கு அந்நோய்கள் ஏற்படா.

தொழில்

அச்சுத் தொழிலாளிக்கு அவர்கள் கையாளும் வங்கத்தின் நாட்பட்ட விடத்தன்மையால் வயிற்று வலியும், சுரங்கத் தொழிலாளிக்கு நுரையீரலில் பல பிணிகளும், மூக்குப்பொடி உற்பத்தியாளருக்கு மூக்கிலும், சுவாசப்பாதையிலும் பற்பல பிணிகளும் உண்டாகக் கூடும். இவைகளை அனுபவத்தால் அறியலாம்.

இருப்பிடம்:

இதனை நிலத்தின் ஐவகைப் பாகுபாட்டின் அடிப்படையில் ஆய்ந்தும் ஒரே ஊர் அல்லது நகரத்தின் நெரிசல், சூழ்நிலை முதலியவைகளின் காரணத்தால் காணக்கூடிய சுகக்கேட்டையும் கணித்து பிணியாளியின் நோயைப் பெரும்பாலும் கணிக்க இயலும். குறிஞ்சி நில வாசிகளுக்கு (மலையும் மலை சார்ந்த இடமும்) இரத்தத்தை உறிஞ்சுகின்ற சுரம், ஆமைக்கட்டி முதலியவை உண்டாகும். சிலேட்டுமம் (கபம்) மிகுதிப்படும்.

பாலை நிலவாசிகளுக்கு முத்தோடப் பிணிகள் ஏற்படக் கூடும். முல்லை நிலவாசிகளுக்கு (காடும் காடு சார்ந்த இடமும்) பித்தப் பிணிகளும் வல்லை நோயும் உண்டாகும். வாதச் சார்பான நோய்களும் இங்கு தோன்றும். நெய்தல் நிலவாசிகளுக்கு (கடலும் கடல் சார்ந்த இடமும்) வாதப் பிணிகள் உண்டாகும். ஈரல் வீக்கம், குடல் வாயு, யானைக்கால் முதலியவை தோன்றும்.

மருத நில வாசிகளுக்கு (வயலும் வயல் சார்ந்த இடமும்) நோய்கள் அணுகாது. முத்தோடமும் தணியும்.

இந்த வகையான ஊகங்கள் நகரங்களிலிருந்து வெகு தூரத்தில் உள்ள சிற்றூர் வாசிகளிடமிருந்து அறியப் பயன் தருவனவாக உள்ளன.

பெரிய நகரங்களில் வீடுகளின் நெருக்கம், தெருக்களின் நெருக்கம், போக்கு வரத்து நெரிசல், ஜனத் தொகை பெருக்கம், மரம், செடி, கொடிகள் இல்லாமை, பெரிய தொழிற்சாலைகளிலிருந்து வெளியாகும் புகை, விஷ வாயு, மலின நீர் முதலியவைகள் மிகுதியாக உள்ள சூழ்நிலையில் உள்ள வீட்டு வாசிகளுக்குப் பருகும் நீரும், சுவாசிக்கும் காற்றும் மிகவும் மலினமடைந்துள்ள காரணத்தால் குடற்புண், விஷசுரம், குட்டம், நீர்க்குண்டிக்காய்ப்பிணிகள், யானைக்கால், இதயப் பிணிகள், முறைக்காய்ச்சல், புற்றுநோய்கள் முதலிய பிணிகள் தோன்ற வாய்ப்பு உண்டு.

நோயாளியின் முழு முகவரி:

இதனை நோய்க் குறிப்பேட்டில் திருத்தமாகப் பதித்து வைத்தல் வேண்டும். இதன்பயன்.—*1.* நோயாளி மருத்துவமனையை விட்டுச் சென்றபின்னும் அவன் குணமடைந்த நிலையின் நீடிப்பை அப்போதைக்கப்போது எழுதி வரவழைத்துப் பரிசோதித்து அறிய இயலும்.

*(2)* சில பிணியாளிகளை மாதாமாதம் வரவழைத்து மருத்துவம் செய்யவும் இயலும்.

(ஆ) நோயாளியை, அடுத்தபடியாக அவனுக்கு உண்டாகிய நோய் அல்லது நோய்களின் விவரங்களைக் கேட்டு குறிப் பெடுக்க வேண்டும். பெரும்பாலும் நோயாளி தன் நோய் களின் பட்டியலையே கூறுவது இயல்பு. ஆகவே அவைகள் யாவற் றையும் ஒன்றுவிடாமல் குறிப்பெடுத்தல் வேண்டும். அவனுக்கு ஏற்பட்ட துன்பங்கள் எத்தனை நாட்களாகத் தொடர்ந்து உள்ளது என்பதை முறைப்படி கூறச் செய்து,குறித்துக்கொள்ளல் வேண்டும்.

உதாரணமாக பிணியாளன் கழுத்தில் வீக்கம் முதலிலும் குரல் கம்மல் பிறகும் அதன் பின் விழுங்கும் ஆற்றல் குறைந்து வந்ததாகக் கூறினுல் அவைகளின் தோற்றக் காலத் தினை முறைப்படி நோயாளியை வினவி பதில் வாங்கி குறிப் பெடுத்தல் வேண்டும். அவனுல் சரியாகக் கூற இயலவில்லை யெனில் அதனையும் குறிப்பில் எழுதி வைத்திடல் வேண்டும்.

தற்போது உண்டாகியுள்ள நோய் காண்பதற்குமுன் சற்றும் பிணியின்றி இருந்ததுண்டா எனக் கேட்டுக் குறிப்பெடுத்துக் கொள்ளல் வேண்டும். சில பிணியாளர்கள் தமக்கு அடிக்கடி தோன்றிவந்த சிறிய தொந்தரவுகளை மறந்து தற்போது உண்டாகியுள்ள பெரிய தொந்தரவைக் கூறுவது இயல்பு. உதாரண மாக மூல முளை பருத்து ஆசனவாயை அடைத்துக் கொள்ளும் பிணியாளன் அவனுக்குப் பல காலமாக மலபந்தம் இருந்து வந்த வரலாற்றையும் சில சமயங்களில் இரத்தம் வெளிப் பட்டதையும் மறந்து அதைக் கூருமல் விட்டுவிடுவதும் உண்டு. அப்படிப்பட்ட தருணத்தில் நம் கேள்வி மூலமாக அந்த உண் மையை வரவழைக்க வேண்டும்.

(இ) தற்போதுள்ள நோயின் வரலாறு:

முதன் முதலாக இந்நோய் எவ்வாறு தோன்றியது என் பதை நோயாளி விவரித்த வண்ணமே குறிப்பில் எழுதிக்கொள் ளல் வேண்டும். தற்போது கண்டுள்ள நோய்க்கு வேறு எங் கெங்கு எத்தனைக்காலம் வைத்தியம் செய்துக்கொண்டார் என்பதைக் கேட்டு குறித்திடல் வேண்டும்.

(ஈ) பழைய நோய்களின் வரலாறு:

நோயாளிக்கு தற்போது கண்டுள்ள நோய்க்கு முன் ஏதாவது பிணிகள் ஏற்பட்டதுண்டா என்பதைக் கேட்டு அவை களையும் குறிப்பு எடுத்துக்கொள்ளல் வேண்டும். நோயாளிக்கு நினைவு தெரிந்த போதிலிருந்தே தன் சிறு வயதில் ஏற்பட்ட நோய்களையும் அதனுல் படுத்த படுக்கையாக இருந்திருப்பின் அந்த கால அளவையும் வரிசைப் படி ஒன்றன்பின் ஒன்ருகத் தற்காலத்தில் தோன்றியுள்ள பிணிவரை கூறக் கேட்டு குறிப்பு எடுத்தல் வேண்டும். நோயாளி அனுபவித்த பழைய நோய் களும் தற்போது தோன்றியுள்ள பிணிக்கும் தொடர்பு இருப் பினும் இருக்கலாம்; இல்லாமலும் இருக்கலாம். குறிப்பு

முழுமையாக இருத்தல் வேண்டும் என்பதே குறிக்கோளாகும். தகா உடலுறவால் ஏற்படக்கூடிய நோய்கள் எப்போதாவது நோயாளிக்கு ஏற்பட்டதுண்டா என்பதை நேரடியாகக் கேட்டால் சிலர் இல்லை என்று மறுத்துவிடுவார்கள். ஆகவே, அவர்களை மறைமுகமாக நீர் எரிச்சலும் குறி வழி வெள்ளைப் போக்கும் இருந்ததுண்டா என்றும், குறியில் புண் ஏற்பட்டது உண்டா என்பது போலக் கேட்டு பதில் வரவழைத்தல் வேண்டும். மணமான பெண்களிடம் அடிக்கடி கருச் சிதைவோ, இறந்த பிள்ளைப் பேறோ ஏற்படுவது உண்டா என்பதையும் கேட்டுக் குறிப்பெடுத்தல் அவசியம் ஆகும்.

(உ) சுய சரிதம்:

நோயாளிக்கு புகைப் பிடித்தல், புகையிலை போடுதல், கள், சாராயம் முதலியவைகளைக் குடித்தல், கஞ்சா, அபினி போன்ற லாகிரி வஸ்துக்களை உபயோகித்தல், மற்றும், அகால உணவு, அமித உணவு, காலவரம்பின்றி அடிக்கடி உண்ணல், ஒரே நேரத்தில் மிகு சூடுகையுள்ள உணவையும் பனித்த உணவையும் உட்கொள்ளல் என்பவை போன்ற பழக்கம் உண்டா என்பதைக் கேட்டறிந்து குறிப்பில் எழுதி வைத்தல் வேண்டும். நோயாளி மணமானவரா இல்லையா, மணமாகி தாரமிழந்தவரா அல்லது புருஷனை இழந்தவரா என்ற விஷயங்களைப் பதிந்து கொள்ள வேண்டும். நோயாளியின் குழந்தைகளைப் பற்றி—கருவுண்டானது எத்தனை? உயிருடன் பிறந்தவை எத்தனை? கருச் சிதைவும், மரித்து பிறந்தவைகளும் எத்தனை? உயிரோடு உள்ளவை எத்தனை? இறந்தவை எத்தனை? அவைகளில் ஆண்கள் எத்தனை? பெண்கள் எத்தனை? என்று எழுதி கொள்ள வேண்டும். உயிரோடுள்ள குழந்தைகளின் தேகசுகத்தைப் பற்றியும் இறந்தவைகளின் காரணங்கள் குறித்தும் வினவி எழுதிக் கொள்ளல் வேண்டும். பிள்ளைகள் பிறவியிலேயே உதடுகிழிந்தபடியோ, கைகோணல், பாத வக்கிரம் போன்ற ஊனத்துடனே பிறந்துள்ளனவா எனக் கேட்டு அவைகளையும் குறிப்பில் வரைந்து கொள்ளல் வேண்டும்.

(2) உடலின் வெளிப்புறப் பரிசோதனை.

(அ) பொதுத் தோற்றம்:

நோயாளியின் தேகக் கட்டு, தசை வளர்ச்சியின் வளம், இளைத்த தன்மை, காமாலை கண்டிருக்கும் தன்மை, இரத்தம் குறைந்து உடல் வெளுத்துள்ள தன்மை போன்றவைகளையும், பொதுவாக உடல் நிலை இயல்பாக உள்ளதா அல்லது நோயாளி போன்ற தோற்றம் உடையவனாக உள்ளானா என்பதையும் குறிப்பிடல் வேண்டும். அளவுக்கு மேல் விழி பிதுங்கியுள்ளது போன்ற தோற்றமும், அசைக்க முடியாமல் வெளிப்புறமாகப் புறண்டுள்ள கால்களும், அளவுக்கு மீறி சுருண்டு படுப்பதும் போன்ற தன்மைகள் நோயாளியிடம் காணப்பட்டால் அதை அலட்சியம் செய்யாமல் குறிப்பில் எழுதி வைத்தல் வேண்டும்.

நாடி நடையையும், மூச்சு ஓட்டத்தின் வேகத்தையும் தன்மையையும் குறிப்பிடல் வேண்டும். உடல் வெப்பத்தைத் தொட்டுப் பார்த்து குறிப்பில் எழுதல் வேண்டும்.

(ஆ) நோயுற்ற இடத்தைப் பரிசோதித்தல்:

பெரும்பாலும் நோயாளியிடம் கேட்டறிந்த வரலாற்றின் உதவியால் நோயுற்ற இடத்தை நன்கு அறிய இயலும். ஆகவே அவ்விடத்தை (1) பார்வையிட்டு அறிதல், (2) பரிசித்தறிதல், (3) அசைவுகளைக் கண்டு அறிதல், (4) அளவைக் கணித்து அறிதல் எனப் பரிசோதனை முறை நால்வகைகளாகும்.

பார்வையிட்டறிதல்:

(1) நோயுற்ற அங்கத்தைப் பார்வையிடும்போது அதற்கு இணையான மறு அங்கத்தையும் பார்த்து ஒப்பிட்டு, காணும் வேறுபாடுகளைக் குறிப்பெடுக்க வேண்டும். நன்கு பழக்கப்பட்ட கண்ணால் அறுவை சிகிச்சைக்குரிய நோய்களைக் கண்டு பிடிக்க முடியும். கண்ணால் பார்வையிட்டு கண்டுபிடிக்கக் கூடிய அறுவை சிகிச்சைக்குரிய நோய்கள் பெரும்பான்மையானவை. அதனுடன் கையால் பரிசித்துப் பார்த்தும் கண்டுப்பிடிக்கக் கூடிய அறுவை சிகிச்சைக்குரிய நோய்கள் சிறுபான்மையானவை. அவைகளுடன் பிறவகைப் பரிசோதனையும் கொண்டு கண்டுபிடிக்கக்கூடிய அறுவை சிகிச்சைக்குரிய நோய்கள் மிகச் சிலவே என்பது அனுபவமிக்க மருத்துவரின் கொள்கையாகும். ஆகவே, நாடோறும் மாணவர் தம் பார்வையிடும் ஆற்றலை செவ்வனே பல நோயினிமித்தம் பொறி புலன்களைக் கொண்டு அயராமல் ஆய்ந்து பார்த்து வளர்த்துக் கொள்ளல் வேண்டும்.

பொதுப் பரிசோதனை:

நோயுற்ற இடமின்றி உடலின் மற்ற உறுப்புக்களையும் பொதுவாகப் பரிசோதித்தல் மிக்க உபயோகமாக இருக்கும் என்பதைக் கூற வேண்டுவதில்லை. அவ்வகைப் பரிசோதனையால் தற்போது எற்பட்டுள்ள பிணியின் சரியான காரணத்தையும், தீரும், தீரா தன்மையையும் அறிய உதவும். ஆகவே நம் நூல்களில் கூறப்பட்டுள்ள நாடி முதலிய எண் வகைத் தேர்வுகளையும், எழுவகை உடற்கட்டுகளின் சிறப்புப் பரிசோதனைகளையும் முறைப்படி பரிசோதித்தல் மிக்க அவசியமாகும்.

(3) தாற்காலிக நோய்க் கணிப்பு:

இதுவரை கூறிய பரிசோதனையின் உதவியால் தாற்காலிகமாய் நோயைக் கணித்து நோயாளிக்கு மருத்துவம் செய்யத் தொடங்க இயலும். தாற்காலிக நோய்க் கணிப்பில் கண்டு பிடிக்கப்பட்ட நோயே உண்மையான நோயாகப் பெரும்பாலும் இருப்பதும் உண்டு. ஏதோ சில பிணிகளைக் கண்டுபிடித்து உறுதி செய்ய சிறப்பான சில முறைகளைக் கையாள வேண்டியும் வரக்கூடும்.

சரியான நோய்க் கணிப்பு :

சில நோய்களை, நோயாளியின் மலம், மூத்திரம், கோழை, கண், நா, நிறம், தொனி முதலியவைகளைப் பரிசோதிப்பதால் நோயாளியின் சரியான நோயை அறிவதுடன் அந்நோயின் சாத்தியா சாத்தியப் பண்பையும் அறிய இயலும். மற்றும், நோயாளிக்குச் செய்ய வேண்டிய மருத்துவத்தை வகைப்படுத்தி முறையாகச் செய்ய முடியும்.

நோயின் மருத்துவத்தால் பெறும் முன்னேற்றம் :

நோயாளிக்கு அளித்துவரும் மருத்துவம், உணவு முதலியவைகளை நாள்தோறும் குறித்துவரல் வேண்டும். அன்றாடம் நோயாளியின் நோய்க்குறிகுணங்களின் மாறுபாடுகளையும் அதனால் ஏற்பட்ட முன்னேற்றத்தையும் குறிப்பிடல் வேண்டும். இவ்வகைக் குறிப்புகளால் அடுத்துவரக்கூடிய அதே நோயுள்ள மற்றவர்களுக்கு மருத்துவம் செய்ய வழிவகுக்க முன்னோடியாக உதவும். மற்றும், நிலையானதும் நம்பிக்கையானதுமான மருத்துவ அட்டவணையைத் தயாரிக்கவும் ஆராயவும் உதவும்.

முடிவு :

நோயாளியைக் குணமடைந்தபின் வீட்டுக்கு அனுப்பி வைத்தலே மருத்துவத்தின் முடிவாகும். நோயாளியை வீட்டுக்கு அனுப்பிவைக்கும் போதுள்ள உடல்நிலை, நோய் முற்றும் குணமடைந்த குறி குணங்கள் முதலியவைகளைக் குறித்து வைத்தல் வேண்டும். நோயாளி மீண்டும் கண்காணிப்புக்கு வரவேண்டுமானால் அவன் வரவேண்டிய நாளைக் குறிப்பிட்டு வைத்துக்கொண்டு அதை நோயாளிக்குத் தெரியப்படுத்திய பின் அவனை வீட்டுக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

அறுவை சிகிச்சைக்குறிய நோய்க் குறிப்பேடு

(மாதிரிப்படி)

நோயாளியின் பெயர் ..............................

முழு விலாசம் ..............................

மதம், இனம் முதலியன..............................

பால்................ வயது......... தொழில்.........

வருமானம் ..............................

இருப்பிடத்தின் இயல்பு..............................

| நோயாளியை வருத்தும் நோய்கள் (தற்போதைய). | நோய்கள் ஒவ்வொன்றுலும் வருந்திய கால அளவு. |
|---|---|
| (1) | (2) |

1.
2.
3.
4.
5.
6.

தற்போது வருத்தும் நோயின் வரலாறு:

(அ) தொடங்கிய விதம்.

(ஆ) வளர்ச்சியடைந்த விதம்.

கால அளவு—பரவிய இடங்கள்—அவயவங்களின் தோற்றம்—வண்ணம், செயல் முதலியவைகளில் காணப்பட்ட மாறுபாடுகள்.

(இ) மருத்துவம். —வகை—கால அளவு—இடம் முதலியன

பழைய நோய்களின் வரலாறு:

| சிறு வயதிலிருந்து வருத்திய நோய்கள். | நோய் ஒவ்வொன்றுலும் அவதிப்பட்ட காலம். | பரிகாரம் செய்து கொண்ட இடம், காலம் முதலியன. |
|---|---|---|
| (1) | (2) | (3) |

1.
2.
3.
4.
5.
6.

சுய சரிதம் :

அ. சுகக் கேட்டைத் தரும் பழக்கங்கள்.

ஆ. குடும்பத்தினர்கள் நோயால் வருந்திய வரலாற்றுக் குறிப்புகள்.

| குடும்பத்தினர். | எண்ணிக்கை. | வயது. | உயிருடன் உள்ளாரா இல்லையா | வாழ்க்கையில் ஏற்பட்ட நோய்கள். | இறந்த காரணம் |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (5) | (5) | (6) |

1. தாய் :

2. தந்தை :

3. மனைவி :

4. குழந்தைகள் :

ஆண் :

பெண் :

கருச்சிதைவு :

மரித்துப் பிறந்தவை :

வெளிப்புறப் பரிசோதனை:

அ. பொதுப் பரிசோதனை.

ஆ. நோய் கண்ட இடத்தில் பரிசோதனை:

1. பார்வையிட்டறிந்த குறிகுணங்கள்.

2. பரிசித்தறிந்த குறி குணங்கள்.

3. அசைவுகளைக் கண்டறிந்த குறி குணங்கள்.

4. அளவின் மாறுபாடுகள் தரும் குறி குணங்கள்.

இ. உடலிலுள்ள எல்லா ஆசயங்கள் உறுப்புகள் முதலியவைகளைப் பரிசோதித்தல்.

உ. எண் வகைத் தேர்வு:

1. மெய்க்குறி.

2. நிறம்.

3. தொனி.

உ. எண்வகைத் தேர்வு—(தொடர்ச்சி):

4. விழி.

5. நா.

6. மலம்.

7. சிறு நீர்:
நீர் நிறக்குறி—நெய்க்குறி.

8. கைக்குறி—நாடி பரீட்சை.

ஊ. எழு வகை உடற் கட்டுகளின் தேர்வு:

1. இரசம்.

2. இரத்தம்.

3. மாமிசம்.

4. கொழுப்பு.

5. என்பு.

6. மூளை.

7. வெண்ணீர்.

தற்காலிக நோய்க் கணிப்பு :

சரியான நோய்க் கணிப்பு :

| தேதி. | மருத்துவம். | உணவு. | நோயாளியின் முன்னேற்றம். |
| --- | --- | --- | --- |
| (1) | (2) | (3) | (4) |

---

முடிவு.

மருத்துவர் கையெழுத்து

# அத்தியாயம் II.

## தடிப்பு அல்லது வீக்கம்.

வரலாறு :

இதனை முதல் அத்தியாயத்தில் கூறப்பட்ட விதமாக நோயாளியை முறையாக வினவி கீழ்க்காணும் விஷயங்களைப் பற்றி குறிப்பெடுத்தல் வேண்டும். மற்றும் பிணியாளனின் பழைய நோய் வரலாறு, (குடும்ப வரலாற்றுடன்) சுயசரிதம், முதலியவைகளையும் எழுதுதல் மிக அவசியம் ஆகும்.

*(1)* நோய் தொடங்கிய கால வரையரை, *(2)* தடிப்பு அல்லது வீக்கம் தொடங்கிய விதம், *(3)* தடிப்பு கண்ட இடமும் உருவமும், *(4)* தடிப்பு வளரும் விதம், *(5)* வேதனை, *(6)* தடிப்பின் அடிப்படையில் பின்னர் ஏற்பட்ட மாறுபாடுகள், *(7)* அதுபோன்ற வீக்கமோ தடிப்போ உடலில் வேறு உண்டோ என்பது *(8)* உடல் எடை குறைவு, *(9)* தடிப்பு அடிக்கடி தோன்றல்.

### (1) நோய் தொடங்கிய கால வரையரை:

ஒரு தடிப்போ வீக்கமோ எப்போது முதல் முதலாக தோன்றியதாக அறியப்பட்டது என்று கேட்டு குறிப்பெடுத்தல் வேண்டும். ஒரு வீக்கம் அண்மையில் தோன்றி வலியுடன் உள்ளதாயின் அவ்வீக்கம் அழற்சியினுலோ அடிப்பட்டதால் ஏற்பட்ட திணிவினுலோ ஏற்பட்டதாக இருக்கலாம். நெடுநாளாக உள்ள வீக்கத்தில் வலியே இல்லாமல் இருக்குமாயின் அது புரைகுழலாக இருக்கக்கூடும். திடீரெனத் தோன்றிய தடிப்பில் மிக்க வலியும் விரைவான பெருக்கமும் காணப்படின் அவ் வீக்கம் புற்று நோயாக இருக்கலாம். சிலர்க்கு நெடுநாளாக இருந்த வீக்கம் புலப்படாமலே இருந்து பிறர் சுட்டிக்காட்டிய போதே உண்டானதாக அல்லது மிக்க அண்மையில் தொடங்கியதாகக் கூறுவதும் உண்டு. அவ்வகைத் தடிப்புகளில் வலியே இல்லாமல் இருக்கும். சில தடிப்பு பிறவியிலேயே உண்டாகி இருத்தலும் உண்டு என்பதை மறத்தல் கூடாது.

### (2) தடிப்பு அல்லது வீக்கம் தொடங்கிய விதம்:

வீக்கம் அல்லது தடிப்பு எவ்வாறு தொடங்கியது என்று வினவி அதன் பதிலைப் பதிந்து கொள்ள வேண்டும். அடிபட்ட இடத்தில் உடனடியாக தடிப்பு தோன்றி இருக்கலாம். உதாரணமாக அடிபட்ட இடத்தில் ஏற்பட்ட காயம்—இரத்தத்திணிவால் ஏற்படுவதாகும். தானுகவே வீக்கம் கண்டு நிதானமாகவும் படிப்படியாகவும் விரைவாகப் பெரிதாகியும் காண்பதுண்டு. உதாரணமாக சீழ்க்கட்டிகளைக் கூறலாம். பழைய

காய வடுவின் அடிப்படையில் தடிப்புகள் ஏற்படக் கூடும், காது, மூக்கு முதலியவை குத்தப்பட்டபின் அந்த இடங்களை அடுத்துத் தசைத் தடிப்பு வளர்தல் உண்டு. மற்றும், அம்மை குத்திய இடத்தையடுத்தும், சூடுகண்ட காயம் ஆறிய இடங்களை யடுத்தும், தடிப்புகள் எழும்பி வரல் கூடும்.

(3) தடிப்பு தோன்றியுள்ள இடமும் உருவமும்:

மிகப் பெரிய வீக்கமோ தடிப்போ ஏற்பட்டுள்ளதாயின் அதன் இடத்தையும் அதன் பரிமாணத்தையும் பார்வையிட்டறிதல் வேண்டும். அவ்வாறு பார்வையிடும் போது உடலின் எந்த இடத்தில் உள்ளது என்பதையும் எந்த உறுப்புடன் சம்பந்தப் பட்டுள்ளது என்பதையும் அறிய இயலும்.

(4) வளர்ச்சி

ஒரு தடிப்பு நாளடைவில் நிதானமாக அதிகப்பட்டு வருகி றதா அல்லது அது தோன்றிய காலந்தொட்டு அதே அளவில் உள்ளதா? அல்லது தோன்றியபோது அதிக அளவில் இருந்து நாளடைவில் படிப்படியாகக் குறைந்து வருகிறதா? என்பதை வினவியும் பரிசோதித்தும் அறிதல் வேண்டும். இவ்வகைப் பரிசோதனை வீக்கத்தின் வகையை உணர வழி செய்யும்.

(5) வலி அல்லது வேதனை:

தடிப்பின் எப்பாகத்தில் வலி அல்லது வேதனை உள்ளது? ஒரே இடத்தில் வலி நிலையாக உள்ளதா? வேற்றிடங்களில் ஓடி ஓடி வலிக்கின்றதா? வலியின் வகை அதாவது ஊசியால் குத்துவது போலவோ, நசுக்குவது போலவோ, திருகுவது போலவோ, அறுப்பது போலவோ, நெருப்பால் சுடுவது போலவோ இருத்தல் கூடும். அவைகளைக் கேட்டு குறிப்பில் எழுதிக் கொள் ளல் வேண்டும். துடித்திடச் செய்யும் வலியாகக் காணப் பட்டால் அந்த வீக்கம் திணிவினுல் ஏற்பட்டு நாளடைவில் சீழ் கொள்ளக்கூடியது என்பதை ஊகித்து அறியலாம். நகில்கள், குதம், கருப்பை ஆகிய இடங்களிலும், இரைப்பை நோயிலும் தொடக்கக் காலத்தில் எந்த வகையான வலியும் தெரிவதில்லை. புற்றுள்ள இடங்களில் வலி காணப்பட்டால் உணர்ச்சி நரம்புகளில் நோய் சம்பந்தப்பட்டுள்ளதாகவும் அவை அறுவை சிகிச்சை பெற ஏற்றதல்ல எனவும் அறிய உதவும்.

(6) தடிப்பின் அடிப்படையில் பின்னர் ஏற்பட்ட மாறுபாடுகள்:

தடிப்பாகத் தொடங்கிய இடத்தில் சில நாட்களுக்குப் பின் புண்ணுதல், துர்மாமிச வளர்ச்சி காணல், இறுக்கம் தளர்ந்து மிருதுத் தன்மை அடைதல் போன்ற மாறுபாடுகள் தோன்றக் கூடும். அவைகளைத் தடிப்பின் பின் விளைவுகள் என்று கூறலாம்.

அத்தகைய பின்விளைவுகள் தடிப்புத் தோன்றி எத்தனைக் காலம் சென்று தோன்றியது, அந்த விளைவு ஏற்பட்டபின் அவ்விடத்தில் வலி, எரிச்சல் முதலிய குறிகள் எப்படி உள்ளன எனக் கேட்டுக் குறிப்பெடுத்தல் அவசியம்.

(7) உடலில் ஓரிடத்தில் தோன்றியுள்ள தடிப்பைப் போன்று வேறு இடங்களிலும் தடிப்பு தோன்றியுள்ளதா எனக் கேட்டறிதல் வேண்டும். சில நரம்பு சம்பந்தமான பிணிகளில் ஒரே மாதிரியான தடிப்போ வீக்கமோ உடலில் பல பாகங்களில் ஒரே சமயத்தில் தோன்றக்கூடும்

(8) உடலில் தடிப்பு ஏற்பட்ட காலந்தொட்டு உடலின் எடை குறைந்து வருகிறதா என்பதைக் கேட்டறிதல் வேண்டும். பெரும்பாலும் புற்று நோயாளிகளின் உடலின் எடை நாளடைவில் குறைவதுண்டு.

**வெளிப்புறப் பரிசோதனை:**

**(அ) பொதுக் கண்ணோட்டம்:**

உடலின் பொதுத் தோற்றம்—இளைப்பு, பாண்டு நோய் மற்றும் உடற்குப் பலவீனம் தரும் பொதுப் பிணிகளின் எடுப்பான குறிகள் காணப்படுகின்றனவா எனப் பார்வையிட்டு அதனைக் குறித்துக்கொள்ளல் வேண்டும். உடலின் வெப்பம் இயல்பாக உள்ளதா? அதிகரித்துள்ளதா? குறைந்துள்ளதா? என்பதைத் தொட்டுப் பார்த்துக் குறிப்பிடல் வேண்டும். இதனைப் புறங்கையால் தொட்டுப் பார்த்தறிதல் மரபு.

**(ஆ) நோயுற்ற இடத்தைப் பார்வையிட்டுக் காண்டல், தடிப்பு அல்லது வீக்கமுடைய நோயினைப் பரிசோதிக்கும் போது:**

(1) தடிப்புகளின் எண்ணிக்கை, (2) தடிப்புகள் இருக்கும் இடம், (3) தடிப்புகளின் பரப்பு, (4) தடிப்புகளின் உருவமும் பரிமாணமும், (5) தடிப்புகளின் வண்ணம், (6) தடிப்புகளின் புறத் தோலின் தன்மை, (7) தடிப்புகளின் ஓரங்கள் (8) தடிப்புகளின் ஊடே நாடித் துடிப்பு உள்ளதா எனக் காண்டல், (9) இருமும் போதும் தும்மும் போதும் தடிப்புள்ள இடத்திலும் அதன் அண்மையிலும் அதிர்வும், பரிமான மாற்றமும் காணப்படுகின்றதா என்பதைக் காண்டல். பின்னும் விடயங்களை முறையாகப் பார்வையிட்டுக் கண்ட குறிகுணங்களைப் பதிந்து கொள்ளல் வேண்டுவது முறைமையாகும்.

(1) தடிப்புகளின் எண் : தடிப்புகள் ஒன்ரு பலவா என்பதை எண்ணிக் குறித்தல்.

(2) தடிப்புகள் இருக்கும் இடம்.— தடிப்புகள் இருக்கும் இடத்தைப் பார்வையிட்டு அவை எந்த அளவுக்குப் பரவியுள்ளது என்றும் எந்த உள்ளுறுப்பில் தொடர்பு கொண்டுள்ளது என்பதை ஊகித்தும் அல்லது எந்த அங்கத்தின்மேல் பரவி உள்ளது என்பதைப் பார்யிைட்டும் குறித்தல் வேண்டும்.

(3) தடிப்புகளின் பரப்பு.—தடிப்புகளின் நீளம், அகலம், கனம் முதலியவைகளைத் தக்கப்படி அளந்து குறிப்பிடல் வேண்டும்.

(4) தடிப்புகளின் உருவமும் பரிமாணமும்.—வட்ட வடிவமாகவோ முட்டை வடிவமாகவோ ஒழுங்கீனமான பரப்பாகவோ உள்ளதா எனப் பார்வையிடல் வேண்டும். அதன் பரிமாணம் சிறியதாக உள்ளதா பெரியதாக உள்ளதா என்பதைக் குறிப்பிடல் வேண்டும்.

(5) தடிப்புகளின் வண்ணம்.— தடிப்புகள் செந்நிறமாகவோ, கருஞ்சிவப்பாகவோ, நீல நிறமாகவோ, கறுத்த நிறத்துடனே காணப்படக்கூடும். அதைக் கூர்ந்து பார்த்துக் குறிப்பிடல் வேண்டும்.

(6) தடிப்புகளின் புறத் தோலின் தன்மை.—தடிப்புகளின் மேல்தோல் சிவந்தும், வெளிறியும், வழுவழுப்பாகவும், சுரசுரப்பாகவும், சுருக்கம் சுருக்கமாகவும், சுருக்கமின்றியும் மினுமிப்பாகவும் மேடுபள்ள முள்ளதாகவும் உள்ளதா என்பவைபோன்ற மற்ற குறிகளைக் குறிப்பெடுத்தல் வேண்டும்.

அடிப்பட்ட தடிப்புக்களின் மேல் தோல் சிவந்தும் சுரசுரப்புடையதாகவும் காணப்படும் இராஜப்பிளவையின் மேல் சல்லடைக்கண் போன்ற துவாரங்களும், அழுகிய தசைத் துண்டுகளின் அடிப்பாகம் கனத்துத் திண்மையாகவும் காணும்.

(7) தடிப்புகளின் ஓரங்கள்.—தடிப்புகளின் ஓரம் எடுப்பாகக் காணப்படுகின்றதா அல்லது ஓரத்தைக் காண முடியாமல் இருக்கிறதா எனக் கண்டு குறிப்பிடல் வேண்டும். தடிப்பான வளர்ச்சி ஒரு காம்பு போன்ற வளர்ச்சியில் பற்றிக்கொண்டுள்ளதா என்பதைப் பார்த்து குறிப்பிடல் வேண்டும். மற்றும் தடிப்பான வளர்ச்சி ஏகாண்டமாகப் பற்றிக் கொண்டுள்ளதா என்பதையும் குறிப்பிடல் வேண்டும்.

(8) தடிப்பினூடே நாடித் துடிப்பு காணப்படுகின்றதா என்பதைக் கைநாடியைப் பார்த்துக்கொண்டே அதே சமயத்தில் தடிப்பினூடே நாடித் துடிப்புக்கு ஏற்ப துடிப்பு காண்கின்றதா எனப் பார்த்தல் வேண்டும்.

(9) இருமும் போதும் தும்மும் போதும் தடிப்புகளில் அல்லது அதன் அண்மையில் அதிர்வோ பரிமாண மாற்றமோ காணப்படின் அதைக் குறித்தல் வேண்டும். குடலண்டப் பிணியில் நோயாளி இருமும் போது தொடை இடுக்கில் ஒரு உருண்டை வடிவ உந்தல் காணப்படும் அல்லது அண்டத்தில் பெருக்கம் காணப்படும் என்பது இதற்கு எடுத்துக்காட்டாகும்.

தடிப்புகளின் புறத்தோலில் பழைய காயவடு காணப்பட்டால் அதன் வடிவம், நீளம், அகலம், தையல் போடப்பட்ட அடையாளம் முதலியவைகளைக் கூர்ந்து கவனித்து குறிப்பிடல் வேண்டும். அகலம் குறைந்து கோடு போன்று நீளமாகவும் தையல் அடையாளமும் உள்ளதாகக் காணில் அது அறுவை சிகிச்சையால் ஏற்பட்டதாகக் கணிக்க இயலும், அகன்றும், ஒழுங்கீனமாகவும், பெரிதாகவும் ஆழ்ந்தோ அல்லது மேடிட்டோ காணப்படின் அடிபட்டோ, கட்டிகள் தானே உடைந்தோ, சூடுபட்ட புண்கள் ஆறியதாலோ மற்றும் பல காரணங்களால் ஏற்பட்டதாக ஊகிக்கவேண்டும். தடிப்புகளின்மேல் புண் காணப்பட்டால், அடுத்த அத்தியாயத்தில் கூறப்பட்டபடி பரிசோதித்துக் குறிப்பு எடுத்துக்கொள்ளல் வேண்டும்.

ஒரு அங்கத்தில் தடிப்பு ஏற்பட்டால் அதன் அழுத்தம் காரணமாக இரத்த ஓட்டத்தடையோ, உணர்ச்சி நரம்பு செய லிழத்தலோ அல்லது அவ்விரண்டு கோளாறுகளுமோ ஏற்படக் கூடும். அந்தக் குறிகுணங்களையும் பார்வையிட்டுக் குறிப்பிடல் வேண்டும்.

குறிப்பு.—தடிப்பைப் பரிசோதிக்க வேண்டி வந்தால் தடிப் பின்மேல் உடனடியாகக் கைவைத்துப் பரிசோதனை செய்யத் தொடங்கக் கூடாது. சற்று நேரம் கூர்ந்து பார்த்துப் பரி சோதித்தல் வேண்டும்.

**தடிப்புக்கண்ட இடத்தைப் பரிசித்துப் பரீட்சித்தல் :**

தடிப்பின் வெப்பதட்ப நிலை, அழுத்தினல் உண்டாகும் வேதனை, தடிப்பின் மேற்பரப்பு சுரசுரப்பாக உள்ளதா? தடிப் பின் ஓரம் எடுப்பாகக் கண்டறியக் கூடியதாக உள்ளதா?இல்லையா? தோலின் கீழ் தனிப்பைக்குள் இட்டு வைத்தது போல் இருக் கின்றதா என்பதையும், தடிப்பை ஒரு புறத்தில் விரலால் அழுத்தி ஞல் அதற்கு நேர் எதிர்ப் புறத்தில் அதே அழுத்தம் பரிசத்துக்குப் புலப்படுகின்றதா என்ற விடயங்களைக் கையால் பரிசித்து அறிதல் வேண்டும்.

ஒரு அண்டத்தின் தடிப்பினூடே ஒரு பக்கத்தில் ஒளிக் கதிரை ஊடுறுவச் செய்து பார்வையிட்டால், ஒளி நிற வேறு பாடில்லா நீர்ப் பொருளின் ஊடே ஒளி பாய்வது காணின் நீரண்டம் என்பதையும் ஒளி ஊடுறுவும் நீர் செந்நிறமுள்ளதாய்க் காணின் குருதி அண்டம் என்பதையும் அறிய இயலும். இப் பரிசோதனையை இருட்டறையில் செய்து பார்த்தல் வேண்டும்.

ஒரு அங்கத்தில் காணப்படும் தடிப்பு உள்ளங்கையால் அழுத்தினல் மறைவதும், அழுத்தம் நீக்கப்பட்டவுடன் காண்ட லும் ஆயின் அந்தத் தடிப்பு இரத்த நாளம் அளவுக்குமேல் விரிவு கொண்டு இரத்தம் தேங்குவதால் ஏற்பட்டதாக அறிதல் வேண்டும்.

தடிப்பின்மேல் வெப்பதட்ப நிலையை புறங்கையால் தொட்டு அறிதல் வேண்டும். தடிப்பினூடே நாடி அதிர்வு உள்ளதா என்பதை அத்தடிப்பின்மேல் உள்ளங்கையைச்சற்று நேரம் வைத்துக் கண்டு பிடித்தல் வேண்டும். மற்ற குறி குணங்களை நுனிக்கையாலும் விரல்களின் உதவியாலும் பரிசித்துப் பார்க்க இயலும். எண் வகைத் தேர்வும், எழுவகை உடற்கட்டின் தேர்வுகளையும் முறைப்படி செய்து நோய்க்குறிப்பேட்டில் வரைந்திடல் வேண்டும்.

**தடிப்பின் தன்மையை அதன் அசைவுகளைக் கண்டு அறிதல்:**

(1) சில தடிப்புகள் ஏகாண்டமாக உடலின் பாகத்தில் பற்றி இராமல் எதேனும் ஓரிடத்தில் பற்றிக்கொண்டும் மீதியுள்ள பாகம் உடலின் புறத்தே சார்ந்து காணப்படும். அத்தகைய தடிப்புகள் அசையும் தன்மை பெற்றிருக்கும். அதனை அசைத்துப் பார்த்தறிய இயலும். (2) சில தடிப்புகள் முன் கை, புயம், தொடை, கால் முதலிய பாகங்களில் இயல்புக்கு வேறுபட்ட அசைவு, மிக்க வேதனையுடன் ஏற்பட்டு இருப்பதும் உண்டு. அத்தகைய அசைவு அவ்வப்பாகத்தின் என்பு முறிவைத் தெரிவிப்பனவாக இருத்தல் கூடும்.

**தடிப்பு தன்மையை அளந்து பார்த்தறிதல்:**

(1) ஒரு புயத்தில் மட்டும் தடிப்பு கண்டிருந்தால் தடிப்பின்றியுள்ள புயத்தையும் தடிப்புற்ற புயத்தையும் தனித் தனியே அளந்து இயல்பாக உள்ள புயத்தைக் காட்டிலும் தடிப்புள்ள புயம் எவ்வளவு பெரிதாய் உள்ளதென்பதையும், இருபுயங்களிலும் தடிப்பு காணப்பட்டால் அவைகளின் பரிமாண வேறுபாடுகளையும் கண்டுபிடித்தல் இயலும். (2) கால் கைகளின் நீண்ட என்பு முறிந்துள்ள காரணத்தால் தடிப்பு உண்டாகி ஓர் உறுப்பு மற்ற இயற்கையான உறுப்பை விடக் குட்டையாகவும் இயல்புக்கு மாறான திருப்பத்துடனும் இருத்தல் கூடும். அவைகளைக் குறிப்பில் எழுதிக்கொள்ள வேண்டும்.

## கட்டிகள்.

அடிபட்டதால் ஏற்படக்கூடும் தடிப்பு முதலாக ஒருவனுக்கு உடலில் ஏற்படும் சிறு கட்டி, பெருங்கட்டி, மேகக் கட்டிகள், பிளவை, பரு, புற்று முதலியனவும் தடிப்பு வகையில் அடங்கும். ஆகவே ஒருவன் உடலில் ஏற்பட்ட தடிப்பு எந்த வகையைச் சேர்ந்தது என்பதைக் கண்டறியவே மேற்படி பரிசோதனை முறைகள் வகுக்கப்பட்டுள்ளது என்க. ஆகவே கட்டிகட்கு தனிப்பரிசோதனை முறைகளை எழுதவேண்டியதில்லை என விடுத்தனம்.

# அத்தியாயம் III.

## புண்கள்.

**வரலாறு :**

புண் அல்லது புண்களுடன் வரும் நோயாளியை இதற்கு முன் அத்தியாயத்தில் விளக்கியபடி கீழ்க்காணும் விஷயங்களைக் குறித்து வினவி வரலாற்றைக் குறித்துக்கொள்ளவேண்டும். (1) புண் தோன்றிய காலவரையரை, (2) புண் தோன்றிய விதம், (3) புண் தோன்றியுள்ள இடமும் உருவமும், (4) புண் வளர்ந்தோ பரவியோ ஆழ்ந்தோ வரும் தன்மை, (5) புண்ணின் அடிப்பாகத்தில் தடிப்பு உண்டானால் அது புண் ஏற்பட்டபின் உண்டானதா அல்லது தடிப்பு முதலில் தோன்றிய பின் புண் தோன்றியதா, (6) புண் ஆறியாறி மீண்டும் மீண்டும் தோன்றுவதுண்டா இல்லையா, (7) புண்ணில் வலி யுண்டா, இல்லையா, வலியுண்டானால் வலியின் தன்மை என்ற விஷயங்களைக் குறித்து வினவி நோயாளி தரும் பதிலை முறைப்படி பதிந்து தற்காலம் காணப்பட்ட நோய் வரலாற்றைக் குறிக்க வேண்டும். மற்றும், முதல் அத்தியாயத்தில் கூறியுள்ளதுபோல மற்ற வரலாறுகளையும் குறித்தல் வேண்டும்—அதாவது பழைய நோய் வரலாறும், குடும்ப வரலாற்றுடன் சுயசரிதமும் என்க.

புண் அடிப்பட்டதால், ஏற்பட்டதாயின் குறுகிய காலத்து புண்ணாகவும், நாட்பட்ட புண்ணாயின் அது துட்டவிரணமெனவும் ஊகிக்க இயலும். அடிபட்ட புண்கள் வேறு தொற்றுகள் ஏற்படாதிருப்பின் வெகுவிரைவில் ஆறிக் குணமடையும். ஆனால் முழங்கால், கணுக்கால் முதலிய முடிச்சு அல்லது மூட்டுகளில் ஏற்பட்ட புண்கள் விரைவில் ஆறுவதில்லை. அந்த அங்கத்துக்கு ஓய்வு இருப்பதில்லை என்பதே அதற்கு காரணம். பெரும்பாலும் புண்கள் ஒரு தடிப்பின் அடிப்படையிலேயே உண்டாவது இயல்பு. புண்களிடம் தோன்றும் வேதனை அதன் பரிமாணத்துக்கு ஏற்ப, குறைவாகவும் மிகுந்தும் காணப்படல் இயல்பு. ஆனால், மேகப் புண்ணில் ஒரு வகையான கொறுக்குப் புண்ணில் சற்றும் வலியே இராது.

### வெளிப்புறப் பரிசோதனை.

(அ) பொதுக் கண்ணோட்டம்:

நோயாளியின் பொதுத் தோற்றம்: இயற்கை நிலையா மெலிந்த நிலையா, பாண்டு, இளைப்பு, உணவு பற்றுக் குறை போன்ற வன்மையைப் போக்கடிக்கும் பிணியாளனா என்று பார்வையிட்டு குறிப்பெடுத்தல் வேண்டும்.

(ஆ) புண்களைப் பார்வையிட்டுக் காண்டல்:

நோயாளியின் புண்களைப் பார்வையிடும்போது (1) புண்களின் எண்ணிக்கை, (2) இருக்கும் இடம், (3) பரிமாணம் அதாவது நீளம், அகலம், ஆழம், (4) உருவம், (5) புண்ணின் அடிப் பரப்பு, (6) புண்ணின் ஓரங்கள், (7) புண்ணிலிருந்து கசியும் அல்லது வடியும் நீர்ப் பொருள் முதலியவைகள், (8) புண்ணி லிருந்து எழும் நாற்றம், (9) புண்ணின் அண்மையில் அல்லது அதைச் சுற்றிலும் உள்ள உடற்பாகங்களில் காணப்படும் இயல்புக்கு மாறுபட்ட குறிகுணங்கள் ஆகியவைகளைப் பரி சோதித்து குறிப்பு வரைதல் வேண்டும்—

(1) புண்களின் எண்ணிக்கை.—அடிபட்ட புண் ஒன்றோ பலவோ இருத்தல் கூடும். மேகப் புண்களும், ஈளை இளைப்பு நோயால் உண்டாகும் புண்களும் பெரும்பாலும் பலவாக இருத்தல் கூடும்.

(2) புண்கள் இருக்கும் இடம்.—மேகப் புண்கள் பெரும் பாலும் பிறப்பு உறுப்புகளிலும், ஈளை நோயால் உண்டாகும் புண்கள் பெரும்பாலும் கழுத்திலும் காணப்படும்.

(3) புண்களின் அளவு.—ஒவ்வொரு புண்ணின் நீளம், அகலம், ஆழம் முதலியவைகளை அளந்து பார்த்து குறிப்பிடல் வேண்டுவது அவசியமாகும். தோராயமாக எழுதுவது கூடாது.

(4) புண்களின் உருவம்.—புண்கள் வட்டமாக, முட்டை வடிவமாக, நான்கு மூலையுள்ள உருவமாக அல்லது ஒழுங்கீனமாக உள்ளதா என்பதைக் குறித்தல் வேண்டும். சில புண்கள் இருகூரான முனைகளும் நடுப்பாகம் அகன்றும் தோற்றமளிக்கக் கூடும். அத்தகைப் புண்கள் கத்தி போன்ற கூரான பொருளால் கிழிக்கப்பட்டதாக இருக்கலாம் எனப் பெரும்பாலும் ஊகிக்க இயலும்.

(5) புண்களின் அடிப்பரப்பு.—புண்களின் அடிப்பரப்பு சிவந்தோ, வெளிறியோ, கறுத்தோ இருந்தால் அதனைக் குறிப் பிடல் வேண்டும். செந்நிறப் புண்கள் ஆறிவரும் நிலையி லுள்ளவை என்றும், வெளிறியுள்ள புண்கள் துஷ்டவிரணங்கள் (நாட்பட்டவை) என்றும் கறுத்த புண்கள் புற்று நோயின் சம்பந்தம் உடையவை என்பதையும் அறிவிப்பனவாகும்.

(6) புண்களின் ஓரம்.—பரவிக்கொண்டே போகும் புண் ணின் ஓரங்கள் அழற்சி கொண்டும், சுரப்புண்டும், வெளிப் புறமாக மடங்கியும் காணப்படும். ஆறிவரும் புண்ணின் ஓரங் கள் சிவந்தும், சுரப்பின்றியும், உட்புறம் மடங்கியுள்ளதாயும் காணப்படும். புண்ணின் ஓரங்கள் மேலுக்கு எழும்பிக் காணப் படுமாயின் அது துஷ்டவிரணக்குறிகுணம் எனலாம். புண்ணின் ஓரம் ஒழுங்காக இருப்பின் அது ஒழுங்கான, கூரான பொருளால் ஏற்பட்டுள்ளதாக யூகிக்கலாம்.

(7) புண்ணிலிருந்து கசியும் அல்லது வடியும் நீர்ப்பொருள் முதலியன : புண்ணிலிருந்து கசியும் நீர்ப்பொருளின் வண்ணம், அடர்த்தி, அளவு, மணம் முதலிய தன்மைகளைக் கண்டு குறிப்பிடல் வேண்டும். நீர்ப்பொருள் ஏதும் வடிவதில்லையாயின் அதனையும் குறிப்பிடல் வேண்டும். ஆறிவரும் புண்ணிலிருந்து பெரும் பாலும் மிகச் சிறிய அளவு நீர்ப் பொருள் வெளியாகக் கூடும்.

(8) புண்ணிலிருந்து எழும் நாற்றம்.—எல்லா வகைப் புண்ணிலும் நாற்றம் உண்டாய் இருப்பதுண்டு. பிணவெடி நாற்றம் உள்ள புண்கள் எவ்வகையான நீர்ப்பொருளின் கசிவும் இராதபோதும்—துஷ்டவிரணம் என்பதை அறிவிப்பதாகும்.

(9) புண்ணின் அண்மையில் அல்லது அதைச் சுற்றிலுமுள்ள உடற்பாகத்தில் காணப்படும் இயல்புக்கு மாறுபட்ட குறிகுணங்கள்:—புண்ணுக்கு மிக்க அண்மையில் பழைய காயவடு உள்ளதாயின் அதை மறவாமல் குறித்துக்கொள்ள வேண்டும். புண்ணின் அண்மையிலுள்ள இடத்தில் சிரைகள் குருதித் தேக்கம் ஏற்பட்டு அவை தடித்துப் பின்னிக்கொண்டுள்ளதா என்பதைப் பார்த்துக் குறிப்பெடுத்தல் வேண்டும்.

(இ) புண்களைப் பரிசித்துப் பரீட்சித்தல்:

புண்களைப் பரிசிக்கும்போது அவைகளில் (1) வேதனை அல்லது வலியுள்ளதா இல்லையா, எந்தப்பாகத்தில் வலி அதிகமாக உள்ளது என்பதை அறிதல் வேண்டும். (2) புண்ணின் ஓரங்கள் தடித்துள்ளனவா இல்லையா, கடினமாக உள்ளதா, மிருதுவாக உள்ளதா என்பவைகளையும், புண்ணை அடுத்தும் அதன் அடிப்பாகத்திலும் வீக்கம் உள்ளதா இல்லையா என்பதைப் பரிசித்துப் பார்த்துக் குறிப்பெடுத்தல் வேண்டும். (3) புண்ணின் ஓரங்களைக் கட்டை விரலாலும் ஆள்காட்டி விரலாலும் இணைத்துப் பற்றி மேலே தூக்கி அதன்கீழுள்ள உடலின்பாகம் அப்புண்ணில் சம்பந்தம் பெற்றுள்ளதா இல்லையா என்பதைக் கண்டு குறிப்பிடல் வேண்டும். (4) புண்பட்ட பாகம், அதன் அடிப்பாகத்திலுள்ள தசை, என்பு முதலியவைகளைப் பற்றிக்கொள்ளாமல், இயக்குந் தன்மையில் மேல், கீழ், பக்கவாட்டங்களில் அசைத்துப் பார்த்து குறித்துக்கொள்ளல் வேண்டும். (5) புண்ணை இலேசாகத் தொடும்போதே மிகுந்த இரத்தப் போக்கு ஏற்படுமாயின் அதனைக் குறித்துக் கொள்ளல் வேண்டும். அத்தகை இரத்தப்போக்கு புற்றுநோயாலுண்டான புண்ணில் காண்பதுண்டு.

புண்ணின் தன்மையை அறிய எண்வகைத் தேர்வுகளும் எழு வகை உடற்கட்டுக்களின் பரிசோதனையும் மிகவும் உபயோக மாய் இருக்கும். உதாரணமாக நீர்ப்பரிசோதனையால் நோயாளிக்கு மதுமேகம் காணப்படின் புண்ணின் தன்மையை நன்கு அறிய இயலும்.

**சிலைப்புண் :** இதுவரை விவரித்ததுபோலவே சிலைப்புண் ணுள்ள நோயாளியின் தற்போதைய நோயின் வரலாறு, பழைய பிணிகளின் வரலாறு, குடும்ப வரலாற்றுடன் கூடிய சுயசரித்திரம் முதலியவைகளை வினவி முறையாகக் குறிப்பில் வரைதல் வேண்டும். நோயாளியைப் பொதுவாகப் பார்வை யிட்டு அவனுடைய தேகவளத்தையும், அவன் உடலுரத்தைப் போக்கவல்ல நோய் பற்றியுள்ளதா என்பதையுங் குறித்திடல் வேண்டும்.

**(அ) சிலைப்புண்ணைப் பார்வையிட்டறிதல்:**

சிலைப்புண்ணின் *(1)* எண்ணிக்கை, *(2)* இருப்பிடம், *(3)* வாய்ப் புறத்தின் தோற்றம், *(4)* கசிவுப் பொருள்கள் முதலியவைகளைப் பார்வையிட்டுக் குறிப்பெடுத்தல் வேண்டும்.

என்புச் சிலைப்புண் பெரும்பாலும் ஒரு நீண்ட என்பின் ஏதா வது ஒரு அந்தத்தின் அண்மையில் காணப்படுதல் இயல்பு. நரம்புச் சிலந்தி என்னும் நோயில் சிலைப் புண்கள் பல காணப் படக்கூடும். வன்முறையில் கத்திகுத்து, அம்பெய்து உண்டா கும் காயம், துப்பாக்கிச்சூடு முதலியவை சிலைப்புண்ணை உண் டாக்கக்கூடும். சிலைப்புண்ணின் வாய்ப்புறத்தில் சிவந்த வளர்ச்சி காணப்படுமாயின் அச்சிலைப்புண்ணின் ஊடே மரித்த என்புத் துண்டுகளோ, உடலில் ஊடுருவிய குண்டோ இருக்கலாம் என ஊகிக்கலாம்.

சிலைப்புண்ணின் அண்மையில் பழைய காயவடுக்கள், சொறி அல்லது தோலின் நிறமாற்றம் ஏதேனும் காணப்படின் அதையும் குறித்துக் கொள்ளல் வேண்டும்.

**(ஆ) சிலைப்புண்ணைப் பரிசித்தறிதல்:**

சிலைப்புண்ணைப் பரிசித்தால் அதில் வேதனை அல்லது வலி இருக்கின்றதா இல்லையா என்பதையும், சிலைப்புண்ணின் சுவர் தடித்துள்ளதா இல்லையா என்பதையும், சிலைப்புண்ணின் அரு கில் கனத்த வீக்கம் உள்ளதா இல்லையா என்பதையும் அறிய இயலும். அவ்வாறு கண்ட குறிகுணங்களைக் குறித்துக்கொள்ள வேண்டும்.

**(இ) சிலைப்புண்ணைச் சலாகையிட்டுப் பரிசோதித்தல்:**

சிலைப்புண்ணில் சலாகையிடும்போது மிக்க விழிப்புணர்ச்சி யுடன் இருத்தல் வேண்டும். எவ்வகையான வன்முறையையும் சலாகை கொண்டு இயற்றல் கூடாது. உட்செலுத்தும்போது அழுத்தியோ திணித்தோ செய்தல் கூடாது.

சலாகை இடுவதால் (1) சிலைப்புண்ணின் ஆழம், (2) சிலைப் புண் ஊடுறுவும் திசை, (3) சிலைப்புண்ணில் உள்ள திடப் பொருள்களில் மோதியதால் காட்டும் குறிகுணங்களையறிதல், (4) சிலைப் புண்ணின் வழியே சலாகை, என்பின் துளைக்குள் நுழைகின்றதா? வேறு எதாவது இடத்தில் நுழைகின்றதா? (5) சிலைப்புண் நேர்கோட்டிலுள்ளதுபோல் உள்ளதா? வளைந்து வளைந்தோ திருகலாகவோ உள்ளதா? (6) சலாகையை வெளியே எடுக்கும்போது சிலைப் புண்ணிலிருந்து நீர்ப்பொருள் ஏதேனும் வெளிப்படுகின்றதா என்பவைகளை அறிய உதவும். அவ்வகைக் கண்டுபிடிப்புகளைக் குறித்துக்கொள்ளவும்.

<u>குறிப்பு :</u> சித்தர் அறுவை மருத்துவ நூலில் பக்கம் 18-ல் சலாகையைப் பற்றிய விளக்கத்தைக் கண்டறிக.

# அத்தியாயம் IV.

## மூலநோய்

**வரலாறு :**

(அ) விளுதல் :—*(1)* தற்போதைய நோயின் வரலாறு *(2)* பழைய பிணிகளின் வரலாறு *(3)* குடும்ப வரலாற்றுடன் கூடிய சுயசரிதம் ஆகியவைகளை நோயாளியின் கூற்றின் படி குறிப்பேட்டில் வரைதல் வேண்டும். சுயசரிதையைக் கேட்டறியும்போது, மூலப்பிணியாளன் *(1)* இறைச்சி, மீன், வாயுப் பண்டங்களாகிய வாழைக்காய், கருணைக்கிழங்கு நீங்கலாக பலவகைக் கிழங்குகள், மிக்க கார்ப்பும் புளிப்பும் உவர்ப்பும் உள்ள உணவுப் பொருள்கள் முதலியவைகளை மிகுதியாக உண்ணும் பழக்கம் உண்டா என்பதைக் கேட்டு அவன் பதிலைக் குறித்துக் கொள்ள வேண்டும். *(2)* மலம், காற்று இவைகளைக் கழிக்கும் உணர்வு ஏற்பட்டபோது வலிந்து அடக்கும் பழக்கம் உண்டா என்று கேட்டறிதல் வேண்டும். *(3)* மலங்கழிக்கும் போது, மலபந்தம் காரணமாய் மிக்க முயன்று முக்கிமுக்கி மலத்தைக் கழிக்கும் பழக்கம் உண்டா என்பதைக் கேட்டறிதல் வேண்டும். *(4)* இடைவிடாது குதிரைச் சவாரி அல்லது துவிச் சக்கர வண்டியில் சவாரி செய்வதுண்டா என்பதை அறிதல் வேண்டும். *(5)* கஞ்சா அல்லது அபினி உட்கொள்ளும் பழக்கம் உண்டா என்பதையும் கேட்டு குறிப்பில் எழுதி வைத்தல் வேண்டும். *(6)* நாள்தோறும் மலம் இயல்பாகவோ கடினமாகவோ, நீர்த்தோ, இறுகலாகவோ வெளியாகும் தன்மையைக் கேட்டுக் குறிப்பில் வரைதல் வேண்டும். *(7)* மலத்துடன் கலந்து இரத்தம் வெளிப்படுகின்றதா? அல்லது மலம் வெளியாகும் முன்னும் பின்னும் இரத்தம் பீறிட்டுக்கொண்டு வெளியாகின்றதா எனக் கேட்டுக் குறிக்க வேண்டும். கெட்டித்த மலம் வெளியாவதற்கு முன்னும் பின்னும் இரத்தம் பீறிட்டு வெளியாவதும் அவ்வாறு வெளியான இரத்தம் சுத்தமாகச் செம்மை நிறத்துடன் காணப்படின் நோயாளிக்கு உள்மூலம் ஏற்பட்டுள்ளது என்பதைத் திண்ணமாகக் கூற இயலும், *(8)* ஆசனவாயில் வேதனையும், அடைப்பு உள்ளதுபோலவும் அதனால் அமைதி இன்மையும் நோயாளிக்கு ஏற்படுவதுண்டா எனக் கேட்டறிதல் வேண்டும். *(9)* நோயாளி மிக்க எளிதில் சீற்றமடையும் நிலையில் உள்ளானா என்பதைப் பரிசோதித்து அறிந்து குறிப்பில் எழுதல் வேண்டும்.

(ஆ) பொதுக் கண்ணோட்டம்:

நோயாளியின் கண்ணிமையும் குவளையும் இயல்புக்கு மாறாக வெளிறியுள்ளதா என்று காணல் வேண்டும். மூலநோயாளிக்கு மிகுந்த இரத்தப் போக்கால் பாண்டு நோய் ஏற்படல் கூடும்.

(இ) நோய் உள்ள இடத்தைப் பார்வையிடல்:

(1) ஆசனவாய்.—அதன் விளிம்புகள் இயல்பாக உள்ளதா, தடிப்பாக உள்ளதா, வெடிப்புகள் உள்ளனவா, இரத்தம், சீழ், கொழுப்புநீர் போன்றவை ஆசன வாய் வழியே வடிந்த குறிகுணம் காணப்படுகின்றதா, ஆசனவாய்க்கு வெளியே மூலமுளை வெளிப்பட்டுக்காணப்படுகின்றதா எனப் பார்த்துக் குறிப்பெடுத்துக்கொள்ளல் வேண்டும்.

(2) இவைகளின் எண்ணிக்கை, வண்ணம், சுரப்பு கண்டுள்ளதா வறண்டு முள் போன்றுள்ளதா என்பதையும் இருக்கும் இடத்தை யும் பார்வையிட்டு குறிப்பெடுத்தல் வேண்டும்.

(3) இரத்தம் .—எருவாயிலிருந்து வெளியான குருதியைப் பார்வையிட்டு அதன் வண்ணம் சுத்த இரத்தம்போலச் சிவந்து காணப்படின் அதுவே உள்மூலம் உள்ளதன் குறிகுணமாம் என்க.

எண்வகைத் தேர்வும், எழுவகை உடற்கட்டின் பரிசோதனையும் செய்து குறிப்பில் எழுத வேண்டும்.

# அத்தியாயம் V.

## பவுத்திரம்.

(ஆ) எல்லா வரலாறுகளையும் நோயாளியை முறைப்படி வினவி குறிப்பேட்டில் எழுதல் வேண்டும். சிறப்பாக நோயாளிக்கு ஏற்கனவே மூலப்பிணி உண்டா என்பதையும் பலகாலத்துக்கு முன் ஏற்பட்ட மேகப் பிணியைச் சரியான மருத்துவம் செய்து கொள்ளாமல் விட்டு வைத்தது உண்டா என்பதையும், மலபந்தம், நீர் அருகல், குடற் கிருமிகளால் ஆசனத்தில் அரிப்பு ஏற்படுவதுண்டா? என்றும் கேட்டுக் குறிப்பில் வரைதல் வேண்டும். காரசாரமான பொருட்களை விரும்பி மிகுதியாக உண்ணும் பழக்கம் உண்டா என்பதைக் கேட்டறிதல் வேண்டும். குதிரைச் சவாரி, துவிச் சக்கர வண்டிச் சவாரி முதலியவைகளில் எந்நேரமும் ஈடுபட்டுள்ளவரா என்பதை நோயாளியைக் கேட்டு குறிப்பில் எழுதிக் கொள்ளல் வேண்டும். எண்வகைத் தேர்வு, எழுவகை உடற்கட்டுகளின் நிலைமை ஆகியவைகளை முறைப்படி பரிசோதனை செய்து குறிப்பேட்டில் எழுதல் வேண்டும்.

(அ) பார்வையிட்டறிதல்:

நோயாளியின் எருவாயைச் சுற்றி பலாக்காய் முள்போல நெருக்கமாகக் கட்டிகள் எழும்பியுள்ளனவா? அவைகள், தானே உடைந்து ஆறுமல் இரணமுண்டாகி துளைகள் உள்ளவைகளாக உள்ளனவா? இவ்விரணங்களிலிருந்து சீழ், இரத்தம், வியர்வை போன்ற கசிவுகள் கசிகின்றனவா? அப்புண்களின் ஊடே குழல் போன்ற துவாரங்கள் ஏற்பட்டு அதன் வழியே காற்று, மலம், சிறுநீர் முதலியவைகளில் ஏதேனும் ஒன்றோ பலவோ வெளியாகின்றதா? என்பவைகளைப் பார்வையிட்டு குறிப்பெடுத்துக் கொள்ளல் வேண்டும்.

பவுத்திர நோய் உள்ள இடத்தைத் திட்டமாய்ப் பார்த்து அறிதல் வேண்டும். இது பெரும்பாலும் எருவாயிலும், பிறப்புறுப்புக்கும் எருவாய்க்கும் இடையிலுள்ள பாகத்திலும், பிறப்புறுப்புகளிலும் காணப்படுவது இயல்பாம்.

பெண்களுக்கு இந்நோய் கஷ்டப் பிரசவத்தால் ஏற்படும் ஜனன பாதைக் கிழிவுகளின் காரணமாக ஏற்படக்கூடும். ஆகவே பெண்களைப் பரிசோதனை செய்ய நேர்ந்தால் இந்த விஷயத்தை மறவாமல் வினவியும் நோயுள்ள இடத்தைப் பார்த்தும் குறிப்பு எடுத்தல் வேண்டும்.

குறிப்பு: சிலைப்புண்ணின் ஒருவாய்ப்புறம் வெளியிலும் மறுவாய்ப்புறம் தசை என்பு முதலிய திடப்பொருள்களால் அடைபடுவதாகவும் இருக்கும். பவுத்திரத்தின் ஒருவாய்ப்புறம் வெளியிலும் மறுவாய்ப்புறம் ஒரு ஆசயம், புழை அல்லது துவாரத்தில் போய் முடியும். (இங்கு ஆசயம், ஜலாசயம், மலாசயம், புழை—மலப்புழை, துவாரம்—காமத்துவாரம் என்பதை குறிக்கும்.)

# அத்தியாயம் VI.

## யானைக்கால்.

(அ) நோயாளியை, தற்போது ஏற்பட்டுள்ள நோயின் வரலாறு, பழைய பிணிகளின் வரலாறு, தன் குடும்ப வரலாற்றுடன் தன் சுயசரிதம் முதலியவைகளை முறைப்படி கேட்டு வரைதல் வேண்டும். அவ்வாறு கேட்கும் வினாக்களில், நோயாளி வசிக்கும் ஊரைப்பற்றி விசாரித்துக் குறிப்பெடுத்தல் வேண்டும். அதுபற்றி கேட்க வேண்டிய முக்கிய வினாக்கள் :—
(1) நோயாளி வசிக்கும் ஊர், நெய்தல் நிலப்பரப்பில் உள்ளதா?
(2) அமிதமாகக் கொசு உற்பத்தியாகக் கூடிய கழிவு நீர்த் தேக்கங்கள் ஊரைச் சுற்றி உள்ளதா என்று வினவி அவன் தரும் பதிலைக் குறித்துக் கொள்ளல் வேண்டும்.

நோயாளி உண்ண உபயோகிக்கும் உணவுப் பொருள்களை எவ்வகை எரு பெரும்பாலும் உபயோகித்து பயிரிடப்படுகின்றன ? நோயாளி வாயுவைப் பெருக்கக்கூடிய உணவுப் பொருள்களை மிகுதியாக விரும்பி உண்பதுண்டா? கொசுக்கடியைத் தடை செய்ய கொசுவலை உபயோகிப்பதுண்டா? இல்லையா? கொசுக்கள் வீட்டில் புகாவண்ணம் துரத்தும் புகை வகைகளை, உதாரணமாக உலர்ந்த நொச்சி இலையையும் மஞ்சள் தூளையும் சேர்த்து தீயிட்டு மாலை வேளையில் புகைப்பது—உபயோகிப்பது உண்டா என்ற விவரங்களை வினவிக் குறிப்பு எடுத்தல் வேண்டும்.

குறிப்பு : இந்நோய் கொசுவினால் பரவுவதாய்க் கண்டு பிடித்துள்ளதால் மேற்படி கேள்விகளைக் கேட்டல் அமையும்.

நோயாளிக்குத் தற்போது ஏற்பட்டுள்ள நோய், தொடக்கத்தில் எவ்வாறு தோன்றியது? அடிக்கடி குளிர் காய்ச்சல் மட்டும் உடல் முழுமையும் நோக்காட்டுடன் எத்தனைக்காலம் தொடர்ந்து வந்தது? குளிர் காய்ச்சலுடன் நெறிக்கட்டியும் உடலின் நோக்காடும் எத்தனைக் காலம் தொடர்ந்து வருத்தியது? குளிர்காய்ச்சல், நெறிக்கட்டி, கை, கால் பீஜம் முதலிய உறுப்பு ஏதேனும் ஒன்றில் வீக்கம் கண்டு மிக்க வேதனை கொடுத்து வந்தது ? எத்தனை மாதங்கள் நீடித்தது? ஒவ்வொரு தடவையும் காய்ச்சல் விட்டபின் வீக்கம் வடிவதுண்டா? எத்தனை மாத காலமாக வீக்கம் நிலைத்துள்ளது எனக் கேள்விகள் கேட்டு கால வரம்புடன் குறிப்பு எடுத்தல் வேண்டும். மற்றும் நெறிக்கட்டிகள் ஏற்படும் இடம் அல்லது இடங்களை விவரமாகக் கேட்டு குறிப்பில் எழுத வேண்டும். சுரம் இன்றியே வீக்கம் மட்டும் தோன்றுவதுண்டா? வீக்கம் தொடங்கிய காலத்தின் கை, கால்களில் எந்த பாகத்தில் முதல்முதலாக தோன்றியது என்பதைக் கேட்டுப் பதிந்து கொள்ளல் வேண்டும். இந்நோயில் வீக்கம் கணுக்காலைச் சுற்றியும் அல்லது

மணிக்கட்டைச் சுற்றியும் பெரும்பாலும் காணப்படுவது இயல்பு. நெறிக்கட்டும் இடமும் பெரும்பாலும் வீக்கம் தோன்றும் இடத்திற்கு ஏற்ப தொடை இடுக்கிலோ அக்குளிலோ மாறு பாடின்றி ஏற்படுவது இயல்பு.

(ஆ) நோய்கண்ட இடத்தைப் பார்வையிடல்:

நோய்கண்ட அங்கத்தைப் பார்வையிடும்போது (1) வீக்கத்தின் பரிமாணம், (2) வீங்கிய பாகத்தில் மேல்தோலின் வண்ணம், (3) வீங்கிய இடத்தின் மேல்தோலின் வெப்பதட்ப நிலை, (4) வீங்கிய உறுப்புக்கு ஏற்ப நெறிக்கட்டி கண்டுள்ள இடம், (5) நெறிக்கட்டியின் பரிமாணம், (6) நெறிக்கட்டியுள்ள பாகத்திலிருந்து வீக்கம் தொடங்கியுள்ள பாகம்வரை மேல் தோலில் வண்ண வேறுபாடு காணப்படுகின்றதா? இல்லையா? என்ற விஷயங்களைக் குறிப்பாகப் பரிசோதித்துக் குறிப்பேட்டில் பதிவு செய்தல் வேண்டும்.

இந்நோய் தொடக்க காலத்தில் வீக்கம் மிக்க இலேசாகவும் தங்கிய இடத்தின் மேல்தோல் சிவப்பாகவும் இருத்தலும், கால் அல்லது பீஜம் வீங்கும் நோயாளிக்குத் தொடை இடுக்கில் நெறி கட்டி ஏற்படுதலும், கைவீங்கும் நோயாளிக்கு அக்குளில் நெறிக்கட்டி ஏற்படுதலும் இயல்பு. ஒரே நோயாளிக்கு கை, கால், பீஜம் என மூன்று இடங்களிலும் ஒரே காலத்திலோ ஒன்றன்பின் ஒன்றாகவோ இந்த யானைக் கால் நோய் ஏற்படக்கூடும் என்பதை மறத்தல் கூடாது. அவ்வாறு பல இடங்களில் நோய் காணுமாகில் நெறிக்கட்டியும் பல இடங்களில் காணக் கூடும்.

(இ) நோய்கண்ட இடத்தைப் பரிசித்து பரீட்சித்தல்:

யானைகால் நோய்க்கண்ட இடத்தைப் பரிசித்துப் பார்க்கும் போது (1) வீங்கிய இடத்தின் மேல் தோல் சுரசுரப்பாகவுள்ளதா? இயல்பாக உள்ளதா? (2) மேல்தோல் தடிப்பாக உள்ளதா? இயல்பாக உள்ளதா? (3) மேல்தோல் வெப்பமுள்ளதாய் உள்ளதா? அல்லவா? (4) மேல்தோல் அழுத்தினால் வேதனை தருகின்றதா? அல்லவா? (5) வீக்கத்தை விரலால் அழுத்தினால் பள்ளம் விழுகின்றதா? அல்லவா? (6) நெறிக்கட்டியைப் பரிசித்தால் வெப்பமும் வேதனையும் காணப்படுகின்றதா? என்ற குறி குணங்களைக் கண்டுபிடித்து எழுதல் வேண்டும்.

சிறுபான்மையாக இந்நோய் குறியிலும், நகிலிலும் பெண்களுக்கு தோன்றக்கூடும். மற்றும், இருபாலார்க்கும் மிக்க அருமையாகக் காது, மூக்கு, உதடு, கண் இமை முதலிய இடங்களில் இந்நோய் தோன்றும் என்று கூறுவாரும் உளர்.

இந்நோயாளியின் உடலின் பொதுநிலைமை, அதாவது உடற்கட்டு, வளர்ச்சி முதலியவைகளையும் பார்வையிட்டுப் பதிதல் வேண்டும். நோயாளிக்கு எண் வகைத் தேர்வும் எழுஉடற்கட்டுகளையும் பரிசோதனைசெய்து கண்டு பிடிப்புகளைக் குறித்தல் வேண்டும்.

# அத்தியாயம் VII.

## கண்டமாலை.

**வினுதல்:**

நோயின் வரலாறு, முன்தோன்றியபிணிகளின் வரலாறு, குடும்ப வரலாற்றுடன் சொந்த சரிதையைக் குறித்தல் வேண்டும். நோய்க் குறிப்பேட்டில் நோயாளியின் வயதை மறவாமல் குறித்து வைத்தல் வேண்டும். தற்போது வருத்தும் பிணியைப் பற்றிய வரலாறு குறிக்கும்போது, பிணியாளிக்கு மாலையில் மட்டும் காய்ச்சல் தொடர்ந்து வருகிறதா? என்றும், நள்ளிரவில் உடல் முழுதும் வியர்க்கின்றதா? என்றும் கேட்டுக் குறிப்பெடுத்துக் கொள்ளல் வேண்டும். மேகத்தால் தோன்றியிருப்பின் காய்ச்சல் இராது. கட்டிகள் பெரிதாக இருக்கும்.

இப்பிணி பெரும்பாலும் கழுத்தைச் சுற்றிக் கட்டிகளின் உருவில் தோன்றும் தன்மை உடையது. ஆகவே இதனைப் பரிசோதிக்க இரண்டாம் அத்தியாயத்தில் தடிப்பைப் பரிசோதிக்கக் கூறியுள்ள முறைப்படி பார்வையிட்டும் பரிசித்தும் நோய்க் குறிப்பேட்டில் வரைதல் வேண்டும்.

உடலின் எடை குறைவு, மெலிவு முதலிய பலவீனம் தரவல்ல குறிகள் காணப்பட்டால் அவைகளைக் குறிப்பிடல் வேண்டும். இந்நோயால் கேடடைந்த குற்றங்களும், உடற்கட்டுகளும் யாவை என்பதைப் பரிசோதித்து குறிப்பிடல் வேண்டும். எண்வகைத் தேர்வும், ஏழு உடற்கட்டுகளின் பரிசோதனையும் செய்து குறிப்பேட்டில் பதித்தல் வேண்டும்.

# அத்தியாயம் VIII.

## அடிதள்ளல்.

**வரலாறு :**

**(அ) வினுதல் :** தற்போதுண்டாயிருக்கும் பிணியின் வரலாறு பழைய நோயின் வரலாறு, சுயசரித்திரம் முதலியவைகளை வினவி அறிதல் வேண்டும். பிணியாளி பெரும்பாலும் சிறு பிள்ளையாக இருத்தல் உண்டு. ஆகவே அதன் தாயாரையோ அல்லது அவரை மருத்துவத்துக்குக் கொணர்ந்த பெரியவர்களையோ கேட்டுக் குறிப்பெடுத்தல் வேண்டும்.

*(1)* நோயாளியின் சரியான வயது, *(2)* நோயாளிக்குத் தொடர்ந்து பேதியானதுண்டா? *(3)* நீர்ப்பேதியா? சீதபேதியா? சீதரத்தபேதியா? எவ்வகை பேதியானது? *(4)* பேதி ஒரு நாளைக்கு எத்தனை முறை, எத்தனை நாட்கள் ஆனது? அல்லது ஆய்க் கொண்டே உள்ளதா? *(5)* மலம் கழிக்கும்போது (இந் நோய் ஏற்படாத காலத்தில்) முக்கிமுக்கிக் கழிக்கும் பழக்கம் உண்டா? என்னும் விஷயங்களைக் கேட்டு அதன் பதிலைக் குறித்துக்கொள்ள வேண்டும்.

**(ஆ) பார்வையிட்டுப் பரிசோதித்தல் :** ஆசனவாயை (எருவாயைப்) பார்த்து (1) எவ்வளவு நீளம் வெளிப்பட்டுள்ளது. (2) அதன் வண்ணம்—சிவப்பு அல்லது கருஞ்சிவப்பாய் உள்ளதா? வெளிறி உள்ளதா? அல்லது நீலம் பாரித்துள்ளதா? (3) வெளிப்பட்டுள்ள பாகத்திலிருந்து ஏதேனும் நீர்பொருள் கசிகின்றதா? (4) வெளிப்பட்டுள்ள பாகத்தில் தசை வளர்ச்சி போன்று ஏதேனும் உள்ளதா? அப்படி இருப்பின் அதன் எண்ணிக்கை, வண்ணம் முதலியவைகளைக் குறித்துக் கொள்ளல் வேண்டும்.

**(இ) பரிசித்துப் பரிசோதித்தல்:**

ஆசனவாய் வெளிப்பட்டுள்ள பாகத்தை விரலால் தொட்டுப் பார்த்து அதன் வெப்பதட்ப நிலை (2) மெத்தென்றுள்ளதா? கனத்து உள்ளதா? (3) கையால் அழுத்தும்போது வேதனை தருவதாக உள்ளதா? (4) கையால் சிறிது அழுத்தி உள்ளே தள்ளக் கூடியதாக உள்ளதா? என்ற விவரங்களைக் கண்டு எழுதி வைத்தல் வேண்டும்.

**(ஈ) பொதுக் கண்ணோட்டம்:**

நோயாளி மெலிந்தும், மிக்க பலவீனமாகவும் இருக்குந் தன்மையைக் கணித்துக் குறிப்பிடல் வேண்டும். எண்வகைத் தேர்வும் ஏழு உடற்கட்டின் நிலையைப் பரிசோதித்துக் குறிப்பிடல் வேண்டும்.

## அத்தியாயம் IX

### நகில் கட்டி.

**வரலாறு :**

(அ) முறைப்படி வினவி மூன்று வகையான வரலாறுகளையும் குறிப்பிட வேண்டும் (அத்தியாயம் 1-ஐ கவனிக்க).

(1) பால் குடிக்கும் குழந்தை உள்ளதா? (2) பால் குடிக்கும் குழந்தையின் பல் அல்லது நகம் அழுந்திய வரலாறு உண்டா? (3) முலைக்காம்பில் வெடிப்புகள் காணப்பட்டதுண்டா? என்ற விவரங்களையும், கட்டி தோன்றி எத்தனை நாட்கள் ஆகியது என்பதையும் நோயாளியை வினவி குறிப்பெடுத்தல் வேண்டும்.

**(ஆ) பார்வையிட்டறிதல்:**

நோயுள்ள நகிலைப் பார்வையிடும்போது நோயாளியை உட்கார வைத்து நோயற்ற நகிலோடு ஒப்பிட்டுப் பரிசோதித்தல் வேண்டும். பார்வையிடும்போது (1) நகில் ஒன்றைவிட ஒன்று உயர்ந்து இருப்பதாகக் காணல் (2) ஒன்றைவிட ஒன்று பரிமாணத்தில் மாறுப்பட்ட தன்மை (3) நோயுள்ள நகிலின் மேல்தோலின் வண்ணம், கனம் முதலியவை (4) முலைக் காம்பின் வழியாக வடியும் நீர்ப்பொருள்-நீர், பால், குருதி, சீழ்

போன்றவை உண்டாயின் அதன் அளவு, மணம் முதலிய விவரங்களை, (5) முலைக் காம்பில் வெடிப்பு, பரு, சொறி போன்ற குறிகள், (6) முலைக்காம்பு உள்ளுக்கு இழுத்துக் கொண்டுள்ளதா? இயல்பாக உள்ளதா என்பவைகளைக் கவனித்துப்பார்த்துக் குறிப்பெடுத்தல் வேண்டும். நோயாளிக்குக் காய்ச்சல் உண்டா என்பதையும் பரீட்சித்துக் குறிப்பில் எழுதல் வேண்டும்.

(இ) நகில் கட்டியைப் பரிசித்து பரீட்சித்தல்:

நகில் கட்டியைப் பரிசித்துப் பார்க்கும்போது (1) வெப்பமாக உள்ளதா? (2) நகில் கட்டி மெத்தென்றும் அழுந்தும் தன்மையுடனும் உள்ளதா? அல்லது கல்போலக் கனத்துடன் அழுந்தும் தன்மையற்று உள்ளதா? (3) நகில் கட்டியைத் தொடும்போது மிக்க வேதனையாக உள்ளதா அல்லது எவ்வளவு அழுத்தியும் வேதனை இன்றி உள்ளதா? என்னும் விவரங்களைக் கண்டு குறிப்பில் எழுதல் வேண்டும்.

மேலும், இந்நூலின் இரண்டாம் அத்தியாயத்தில் கூறப்பட்ட தடிப்புகளின் பரிசோதனையைப் போல எல்லா விவரங்களையும் பரீட்சித்துப் பார்த்து குறிப்பெழுதல் வேண்டும். எண்வகைத் தேர்வும் எழுவகை உடற்கட்டின் தேர்வையும் செய்து குறிப்பெடுத்தல் வேண்டும்.

## அத்தியாயம் X.

### விதை நோய்.

இந்நூலின் முதலிரண்டு அத்தியாயங்களில் விவரித்தபடி பரிசோதனையைச் செய்து குறிப்பு எழுதுதல் மிக முக்கியமாகும். மூவகை வரலாறுகளையும் செம்மையுற வினவி குறிப்பு எடுத்தல் வேண்டும். சில வினுக்கள்—

(1) விதையில் நோய் எவ்வாறு தொடங்கியது? (2) நோய் தொடங்கி எத்தனை நாள் (காலம்) ஆகியது? (3) அடிக்கடி காய்ச்சல் வந்து சிறிசிறிதாக விதை வீக்கம் வளர்ந்ததா? (4) காய்ச்சல் ஏதும் இல்லாமலே விதை வீக்கம் மிக்கவேதனையுடன் ஏற்பட்டதா? (5) விதையில் அடிபட்ட பின்னர் வீக்கம் கண்டு அதைத் தொடர்ந்து வீக்கம் பெருகத் தொடங்கியதா? (6) வெள்ளை, கொறுக்கு போன்ற ஜனன உறுப்பு நோய்கள் ஏற்பட்டு சரிவரச் சிகிச்சை செய்யாத காரணத்தால் விதைநோய் ஏற்பட்டதா? என்பவை போன்ற வினுக்களைக் கேட்டு குறிப்பு எடுத்தல் வேண்டும். (7) நோயாளிக்கு க்ஷயப் பிணி ஏற்கெனவே ஏற்பட்டுள்ளதா என்பதைப் பரிசோதித்துக் குறிப்பில் வரைந்து கொள்ளல் வேண்டும்.

அடிபட்டதால் அண்ட வீக்கம் ஏற்பட்டால் பெரும்பாலும் இரத்த அண்டமாகவும், க்ஷயப்பிணியாளனுக்கு அப்பிணியின் காரணமாகவும் அண்டநோய் ஏற்படக் கூடுமென்று கூற இயலும்.

(அ) பார்வையிட்டுக் குறிபபெடுத்தல் :

நோயுற்ற அண்டத்தைப் பார்வையிட்டு (1) வீக்கம் ஒரே விதையில் உள்ளதா? அல்லது இரு புறமும் உள்ளதா? (2) விதைப்பையின் தோலில் இயல்பாய் உள்ள சுருக்கங்கள் உள்ளன வா? இல்லையா? (3) விதைப்பையின் நிறம், (4) விதைப்பையின் மேல் தோலில் தடிப்பு காண்கின்றதா? இல்லையா? (5) விதைப் பையின் மேலே வேறு வகை தடிப்போ, எழுச்சியோ, சொறியோ ஏற்பட்டுள்ளதா? (6) விதைப்பையில் சிலைப்புண்ணோ பவுத்திரமோ காணப்படுகின்றதா? என்பவைகளைக் கண்டு பிடித்துக் குறிப்பில் பதிய வேண்டும்.

விதைப்பையின் மேல் தடிப்போ புண்ணோ காணப்படின் அதை இந்நூலில் இரண்டாவது மூன்ருவது அத்தியாயங்களில் விவரித்தப்படி பரிசோதனை செய்து குறிப்பெடுத்தல் வேண் டும்.

(ஆ) பரிசித்துப் பரீட்சித்தல் :

(1) விதையின் பின் பாகத்தில் அழுத்திஞல் விதையில் வேதனை உள்ளதா? (2) விதைப்பையைத் தொட்டாலே மிக்க வலி தருவதாய் உள்ளதா? (3) விதைப்பையின் மேலே சிலகாலம் வலி தோன்றியும் மற்ற காலத்தில் எவ்வகை வலியும் இன்றிக் காணப்படுகின்றதா? (4) வீக்கம் விதையைப் பற்றியுள்ளதா? அல்லது விதை இயல்பாக இருந்து கொண்டு விதைப் பையில் மட்டும் வீக்கம் ஏற்பட்டுள்ளதா? (5) விதைப்பையின் மேல்தோல் இயல்பான சுருக்கமின்றிச் சமநிலையில் வீங்கி உள்ளதா? (6) வீக்கத்தை அழுத்தும் போது மெத்தென்று அழுந்தக்கூடிய நிலையில் உள்ளதா? அல்லது அழுத்தும்போது அழுந்தாமல் கனத்துக் கல் போன்று உள்ளதா? (7) விதையில் உள்ள வீக்கம் எழுந்து நிற்கும் போது விதைப்பைக்குள் வருவதாயும், படுக்கும்போது வயிற்றி னுள் புகுவதாகவும் காண்கின்றதா? (8) விதையில் கண்ட வீக்கத்தைச் சற்றுமேலே தூக்கிப் பிடித்து கைகளால் இலே சாக அழுத்தித் தள்ளிஞல் வீக்கம் வயிற்றினுள் புகுந்து விடக்கூடியதாய் உள்ளதா? (9) விதைப் பையிலுள்ள வீக்கம் எப்படி முயன்று அழுத்தித் தள்ளிஞலும் இடப் பெயர்ச்சி கொள்ளாமல் ஒரே நிலையில் இருக்கின்றதா? (10) விதைப் பையின் மேல்தோல் கனத்தும், சுரசுரத்தும், கறுத்தும் உள்ளதா? (11) நோயாளி இருமும்போது அண்டவீக்கத்தில் பெருக்கமும், அதிர்வும் காணப்படுகின்றதா? (12) நோயாளி இருமும்போது தொடை இடுக்கில் ஏதாவது ஒரு உருண்டை யான பொருள் மோதுவதுபோலக் காணப்படுகின்றதா? (13) விதைப் பையைப் பரிசித்தால் ஒரு பைக்குள் உள்ள புழுக்களைப் பரிசிப்பதுபோன்ற உணர்வு காணப்படுகின்றதா? என்று பரி சித்துப் பார்த்து குணங் கண்ட குறிப்புகளைக் குறிப்பில் எழுதிக் கொள்ளல் வேண்டும்.

விதைப் பையின் மேலே இருக்க வேண்டிய சுருக்கங்கள் மறைந்தும், அழுத்தினால் அதுங்கக்கூடியதாகவும் உள்ள அண்ட வீக்கம் பெரும்பாலும் நீரண்டமாக இருத்தல்கூடும். விதைப் பையில் உள்ள வீக்கம் அழுத்தி வயிற்றினுள் தள்ளிவிடக் கூடிய வண்ணமாய் இருந்தால் அது பெரும்பாலும் குடலண்டமாக இருக்கக்கூடும். அண்டத்தின் வீக்கம் விதைப்பையின் தடிப்பால் மட்டும் ஏற்பட்டதாகக் காணின் அது பெரும்பாலும் தசையண்டம் எனப்படும் யானைக்கால் வியாதியின் வகையாக இருக்கக்கூடும். விதைப்பையில் புழுக்கள் உள்ளது போல் கைகளுக்குத் தட்டுப்படின் அவ்வகை அண்ட வீக்கம், சிரைகளில் குருதியோட்டம் தடைப்பட்டுத் தேங்கி அதன் சுவர் கனத்து நிலையாகவுள்ள காரணத்தால் ஏற்பட்டதாக ஊகிக்க இயலும். விதைப்பையும் விதையின் மற்ற பாகங்களும் வீங்காமல் விதை மட்டும் அளவுக்கு மீறி வீங்குதல் உண்டு. அவ்வகை விதை கனமாக கல்போலத் தோன்றுதல் அவ்வகை அண்டம் மேகநோய் சம்பந்தமுள்ளதாகவோ?‘ புற்று நோயின் சம்பந்தமுள்ளதாகவோ கூறலாம்.

ஆண்குறி.—ஒவ்வொரு அண்ட நோயாளியையும் பார்த்துப் பரீட்சிக்கும் போது அவனுடைய ஆண்குறி இருக்கும் நிலையை பார்த்து குறித்தல் வேண்டும். அண்டவீக்கம் மிகப்பெரிதாக உள்ளதாயின் ஆண்குறி அவ்வீக்கத்தினுள் புதைந்து வெளிக்காணுமல் இருக்கும். அவனுக்கு நீர் இறங்கும்போது பார்த்து ஆண்குறி உள்ளது என்பதை யூகிக்கலாம். சில தசையண்ட நோயில் ஆண்குறியும், அளவுக்குமேல் வீங்கியும் வளைந்தும் கல்போலக் கனத்தும் காணப்படும்.

சோகை நோயில் உடல் முழுதும் வீங்குவதுபோல் அண்டமும் ஆண்குறியும் வீக்கம் கொண்டு இருத்தல் கூடும். விதையினுள் கட்டி எழுமாயின் அண்டம் வீங்குவதுண்டு என்பதை மறத்தல் ஆகாது.

எண்வகைத் தேர்வுகளையும், உடற்கட்டுகளின் பரிசோதனைகளையும் முறைப்படி செய்து குறிப்பேட்டில் பதிதல் வேண்டும்.

## அத்தியாயம் XI.

### குஷ்டம்.

மருத்துவம் இரண்டாம் பகுதி (மருத்துவம்—சிறப்பு)யில் இதன் பரிசோதனைக் கிரமத்தைக் கண்டுகொள்க.

## அத்தியாயம் XII.

### கிரந்தி.

இந்நூலின் இரண்டாம் அத்தியாயத்தில் தடிப்புகளைப் பரிசோதிக்கும்முறைப்படி கிரந்தி நோயாளியைப் பரிசோதித்து குறிப்பு எடுத்தல் வேண்டும்.

வீக்கம் எத்தனைக் காலமாய் உள்ளது என்றும் வீக்கமுள்ள இடத்தில் வேதனை, வலி, எரிச்சல், குத்தல், தினவு முதலிய குறிகள் உள்ளனவா என்றும் வினவி குறிப்பில் பதிதல் வேண்டும்.

கிரந்தி கண்ட இடத்தின்மேல்தோலின் வண்ணம், தோலின் தன்மை அதாவது தடிப்பு, கரைவு, திரைதல், மினுமினுத்தல் முதலிய குறிகளைப் பார்த்தும், நோயுள்ள இடம் கடினமாக உள்ளதா, அழுந்தும்படியாக உள்ளதா, குலுங்குவதாக உள்ளதா என்ற விவரங்களைப் பரிசித்துப் பார்த்துக் குறிப்புகள் வரைதல் வேண்டும்.

கிரந்திகளினின்று வடியும் நீர்ப்பொருள் யாது என்றும் அதன் நிறம், அளவு, மணம் முதலியவைகளையும் பார்வையிட்டுக் குறிப்பெடுத்தல் வேண்டும்.

எண்வகைத் தேர்வும், உடற்கட்டின் பரிசோதனையும் செய்து குறிப்பில் வரைதல் வேண்டும்.

## அத்தியாயம் XIII.

### கல்லடைப்பு

இந்நூலின் முதல் அத்தியாயத்தில் வகுத்தபடி நோயாளியைப் பரிசோதித்து முறைப்படி எல்லா விஷயங்களையும் எழுத வேண்டும். முதலில் நோயாளியை வினவ வேண்டிய முக்கிய கேள்விகளைக் கீழே குறிப்பிட்டுள்ளபடி கேட்டு அவனுடைய நோய்க்குறிப்பேட்டில் ஒதுக்கப்பட்ட தலைப்புகளின் கீழ் பதிந்து கொள்ள வேண்டும்.

**வரலாறு:**

*வினாக்கள்.*—(1) அடிவயிற்றில் இசிவுடன் கூடிய வலி திடீரென்று தோன்றி மறைவதுண்டா? (2) உடற்பயிற்சி செய்த உடனேயோ, மிக்க பிராயசைப்பட்டு செய்ய வேண்டிய வேலையைச் செய்து முடித்த உடனேயோ மேற்படி இசிவுடன் கூடிய வலி மிகுவதுண்டா? (3) இசிவுடன் கூடிய வலி முதுகின் கீழ்ப்பாகத்தில் தொடங்கி தொடை இடுக்கு, தொடையின் உட்பாகம், விதை ஆகிய இடங்களில் பரவுவதுண்டா? (4) அத்தகைய வலி தொடங்கியபோது வாந்தியாவதுண்டா? (5) ஆண்குறியின் முனையில் வலி ஏற்பட்டு நீர் முற்றிலும் பெய்தானபின் இறுதிச் சொட்டுகளில் குருதி கலந்து வருவதுண்டா? (6) நீர் பெய்துகொண்டே இருக்கும்போது நீரோட்டம் திடீரென்று மறிபட்டும், தான் உட்கார்ந்த நிலையை மாற்றிய பின் மீண்டும் நீர் வெளியாகிறதா? (7) நீர் பெய்யும்போது அதனுடன் சிறு மணல் போன்ற திடப்பொருள் வெளியாவதுண்டா? (8) நீர் இறங்கும்போது நீரோட்டம் பிளவுபட்டும், சிதறியும், மெலிந்தும் வருவதுண்டா? (9) காய்ச்சல் ஏற்பட்டதுண்டா? அது எத்தனை நாட்கள் நீடித்தது? (10) நாபியைச் சுற்றி வலி கண்டதுண்டா?

நோயாளிக்கு எண் வகைத் தேர்வும், உடற்கட்டு பரிசோதனையும் செய்தல் வேண்டும்.

இந்நோயில், பார்வையிட்டும் பரிசித்தும் காணக்கூடிய வசதியில், நோயுற்ற பாகம் இல்லை என்பதை அறிக.

# அத்தியாயம் XIV.

## ஆண்குறி நோய்.

நோயாளியை முறைப்படி வினவி வரலாறுகளைக் குறித்தல் வேண்டும். ஆண்குறியில் உண்டான நோய் எத்தனைக் காலமாக உள்ளது என்று வினவிக் குறிப்பெடுத்துக் கொள்ளல் வேண்டும். சில நோய் பிறவியிலேயே ஏற்பட்டு இருப்பினும் அது நோயாளிக்கு வயதுவந்து பல ஆண்டுகள் சென்றும் தெரியாமல் இருக்கக்கூடும். உதாரணமாக, தோல் தடைப்புண் என்னும் நோய் பிறவியிலேயே பெரும்பாலும் கண்டிருத்தல் உண்டு.

நோயாளிக்கு பலருடன் கட்டுதிட்டமின்றி உடலுறவு கொள்ளும் பழக்கம் உண்டா? புணர்ந்தபின் நீர் இறங்கும் போது ஆண்குறியில் எரிச்சல், குத்தல், வலி முதலியவை தோன்றியதுண்டா?

(அ) நோயுற்ற இடத்தைப் பார்வையிட்டு அறிதல்:

ஒரு நோயாளியின் ஆண்குறியைப் பார்வையிடும்போது அது இயல்பாக உள்ளதா? இயல்புக்குமேல் நீண்டும் பெருத்தும் உள்ளதா? இயல்புக்கு மிகக் குறுகியும் சிறுத்தும் உள்ளதா என்பதைப்பார்த்து குறிப்பிடல் வேண்டும். குறியின் எழுச்சித் திறன் (லேபனுசக்தி) இயல்பாக உள்ளதா? இல்லையா? ஆண் குறியின் மேல்தோல் குறியை முழுமையாக முடிக்கொண்டுள்ளதா? இல்லையா? ஆண்குறியின் மேல் தோல் முனை சுருங்கி மேலே தள்ளமுடியாதபடி உள்ளதா? எளிதில் மேலே தள்ளக் கூடியபடி உள்ளதா என்பதைப் பார்வையிட்டுக் குறித்தல் வேண்டும்.

ஆண்குறியின்மேல், ஆண்குறியின் முனையில், ஆண்குறியை மூடும் தோலில்-உள்ளும் புறமும் ஏதேனும் தடிப்போ, வீக்கமோ, பருவோ, கட்டியோ, எழுச்சியோ, வெடிப்போ இருக்கின்றதா எனப் பார்வையிட்டு அதனை முன்கூறப்பட்ட தடிப்புகளின் பரிசோதனைக் கிரமப்படி (அத்தியாயம்-2) பரிசோதித்து குறிப்பு எடுத்தல் வேண்டும். புண் காணப்படின் அதையும் ஏற்கனவே கூறப்பட்ட புண்களின் பரிசோதனைக் கிரமப்படி (அத்தியாயம்-3) பரிசோதித்துக் குறிப்பு எடுத்துக் கொள்ளல் வேண்டும். கசிவுகள் இருந்தால் அதன் வண்ணம், அளவு, அடர்த்தி, மணம் முதலியவைகளைக் கண்டு குறிப்பெடுத்தல் வேண்டும்.

(ஆ) நோயுள்ள இடத்தைப் பரிசித்து பரீட்சித்தல்:

ஆண்குறியிலுள்ள புண்ணையோ தடிப்பையோ தொடுவதால் வேதனை உண்டாகிறதா? இல்லையா? அது கடினமாக உள்ளதா? மெத்தென்று உள்ளதா? ஆண்குறிக்கு அண்மையிலுள்ள விதைப்பை, விதை, தொடை இடுக்கு ஆகிய இடங்களில் தொடுவதால் வேதனை இருக்கின்றதா? இல்லையா? தொடை இடுக்கில் ஏற்பட்ட நெறிக்கட்டி மெத்தென்று உள்ளதா? கல்போல உள்ளதா? அவைகளில் வலி உள்ளதா? இல்லையா என்ற விஷயங்களைத் தொட்டுப் பார்த்துக் குறி குணங்களை எழுதிக் கொள்ளல் வேண்டும். ஆண்குறி முழுமையுமோ அதன் மேல்தோல் மட்டுமோ அழுகி வருகின்றதா என்பதையும் பரிட்சித்து குறிப்பிடல் வேண்டும்.

ஆண்குறியில் சிலைப்புண்ணோ, பவுத்திரமோ காணப்படின் அதனையும் முறைப்படி பரிசோதித்து குறிப்பில் சேர்க்க வேண்டும். எண்வகைத் தேர்வும், உடற்கட்டுப் பரிசோதனையும் செய்து குறித்தல் வேண்டும்.

## அத்தியாயம் XV.

### பெண்குறி நோய்.

நோயாளியை வினவி வரலாறு குறித்தல்:

நோயின் கால அளவையும், தோன்றிய விதத்தையும் கேட்டுக் குறிப்பிடல் வேண்டும்.

பெண்குறியில் வேக்காடுள்ளதுபோலவும், குத்தல் உள்ளது போலவும், எரிச்சல் உள்ளது போலவும், காமத்துவாரம் அளவுக்குமேல் அகன்றுள்ளதுபோலவும், காமத்துவாரம் நாளடைவில் சுருங்கிக்கொண்டே வருவதுபோலவும், புணர்ச்சி, உணர்ச்சி, மந்தப்பட்டது போலவும், சிறு கிருமிகள் பல அரிப்பது போன்ற உணர்வும், சதாகாலமும் தினவு காண்பதும், ஆகிய குறிகள் காணப்படுகின்றனவா என வினவிக் குறிப்பெடுத்தல் வேண்டும்.

நீர் எரிவு, வெள்ளை விழல், நீரருகல், மலக்கட்டு முதலியவைகளைப் பற்றி வினவி குறிப்பு எடுத்துக் கொள்ளல் வேண்டும்.

(அ) பார்வையிட்டுக் குறிப்பெடுத்தல்:

குறியின் தோற்றம், பரிமாணம், குறியின் பாகங்கள் இயல்பாக உள்ளனவா? இல்லையா என்றும், வேற்று வளர்ச்சிகள், பருக்கள், சொறி, புண், எழுச்சி, கட்டி முதலியவை உள்ளதாயின் அவைகளை முறைப்படி ஏற்கனவே கூறப்பட்டபடியாகவும், வடியும் திரவங்களின் வண்ணம் முதலியவைகளையும் பார்வையிட்டு குறிப்பெடுத்தல் வேண்டும். இதன் முறையை அத்தியாயம் 2, 3-ல் விரிவாகக் காணலாம்.

எண்வகைத் தேர்வுகளையும், உடற்கட்டுகளின் பரிசோதனையையும் செய்து குறிப்பில் சேர்க்கவேண்டும்.

பெண் குறியில், சிலேப்புண்ணோ, பவுத்திரமோ, உள்ளதாயின் அது ஏற்பட்ட விதம், எத்தனை காலமாய் உள்ளது? அதன்வழி நீரோ, மலமோ இரண்டுமே வருவதாய் உள்ளதா என்பவை போன்ற விஷயங்களை வினவியும், பரிசித்தும் பரிசோதனை செய்தும் குறிப்பில் எழுதல் வேண்டும்.

பெண் குறியில் இயல்பாக இருக்கவேண்டிய இடங்களில் நீண்டு தடித்த தசை வளர்ச்சி ஏற்பட்டிருப்பின் அதைப பார்வையிட்டு அது இருக்கும் இடம், நீளம், கனம் முதலியவைகளையும் அது தொடங்கிய காலத்திலிருந்து நோயாளி பரிசோதனைக்கு வந்த நாள்வரை அது வளர்ந்துள்ள வளர்ச்சியின் தன்மை, அவ்வளர்ச்சியினால் அந்த உறுப்பின் தொழிலுக்கு ஏற்பட்டுள்ள கேடுகள் முதலியவைகளை வினவிக் குறிப்பு எடுத்துக்கொள்ளல் வேண்டும்.

## அத்தியாயம் XVI.

### தலையிலும் கழுத்திலும் வரக்கூடிய நோய்கள்.

1. தலையிலும் கழுத்திலும் நோய் உள்ளதாகக் கூறும் நோயாளியின் தற்போதைய நோய்வரலாறு, பழைய நோய் வரலாறு, குடும்ப வரலாற்றுடன் தன் சுயசரிதம் முதலியவைகளை இந்நூலின் முதல் அத்தியாயத்தில் கூறியபடி வினவிக் குறிப்பு எடுத்தல் வேண்டும்.

2. நோயாளி கூறும் நோய்ப்பட்டியலை ஒன்றுவிடாமல் குறித்துக்கொள்ளல் வேண்டும். ஒவ்வொன்றும் ஏககாலத்தில் தொடங்கியதா, வெவ்வேறு காலத்தில் தோன்றியதா என்பதைக் கேட்டு வரிசைப்பட குறிப்பு எடுத்துக்கொள்ளல் வேண்டும்.

3. பிணியாளியினுடைய பொதுவான தோற்றம், இயல்பான உடற்கட்டு, வயதுக்கேற்ற வளர்ச்சியின்மை, உணவுக் குறைவால் அல்லது பிணியால் மெலிந்த உடல், கயம், பாண்டு, ஆகிய உடலுக்குக் கேட்டை விளைக்கும் நோய் உள்ள தன்மை முதலியவைகளைக் குறிப்பாகப் பார்த்து எழுதிக்கொள்ளல் வேண்டும்.

4. பிணியாளனுடைய நடை, செயல், பேச்சு, குரலின் தன்மை, பார்வை, சொல்வதைப் புரிந்துக் கொள்ளும் ஆற்றல், நினைவாற்றல், தலை, கழுத்து இவைகளின் இயல்பான அசைவு, இயற்கைக்கு மாறுபட்ட அசைவுகள், தலையிலும் கழுத்திலும் காணல் என்ற குறிகளை வினவியும் பார்வையிட்டும் குறிப்பு எடுத்தல் வேண்டும்.

5. தலைமுடி, புருவம், இமை, குவளை இவைகளில் உள்ள மயிர், முகத்திலுள்ள மீசை, தாடி ஆகியவைகளின் வளர்ச்சி, வண்ணம், தன்மை, உதிர்தல், மயிர் உதிர்ந்தது முளையாமலே போகக்கூடிய தன்மை ஆகிய குறிகுணங்களைப் பார்வை யிட்டும் வினவியும் ஆராய்ந்து குறிப்பெடுத்தல் வேண்டும்.

6. காதுகள், மூக்கு, கண்கள், நா, பல், அண்ணம், தொண்டை முதலிய உறுப்புகளில் காணப்படும் மாறுபாடு களையும் குறி குணங்களையும் பார்த்துக் குறிப்பெடுத்தல் வேண்டும்.

7. கழுத்தின் முன்புறம், பிடறி, உச்சி, காதோரம், நெற்றி, மேல்தாடை, கீழ்த்தாடை, இருகன்னங்கள் ஆகிய இடங்களின் பொதுத் தோற்றம், இயல்புக்கு மாறான நிலை முதலியவைகளைப் பார்வையிட்டுக் குறிப்பில் வரைதல் வேண்டும்.

8. கழுத்து, தலை ஆகிய இடங்களில் தடிப்பு, பிளவை, கட்டி, எழுச்சி, புண் முதலியவை ஏற்பட்டிருந்தால் அவைகளை இந் நூலின் அத்தியாயம் 2, 3-ல் கூறப்பட்ட வண்ணம் பரிசோதித்து, குறிப்புகள் வரைதல் வேண்டும். மேற்படி நோய் கள் தலை, கழுத்து பாகங்களில் தோன்றினால் கபாலத்திலும் கழுத்திலும் அவைகளின் அண்மையிலுள்ள உள்ளுறுப்புகளிலும் வேதனைதருமாதலால் அவைகளையும் ஈண்டு கூறப்படும்.

எண்வகைத் தேர்வுகளையும் ஏழு உடற்கட்டுகளின் பரி சோதனைகளையும் செய்து குறிப்பு எடுத்தல் வேண்டும்.

நோயாளியின் தூக்கம், பசி, நீர்வேட்கை முதலியவைகளைப் பற்றி வினவிக் குறிப்பு எழுதிக்கொள்ளல் வேண்டும்.

## அத்தியாயம் XVII.

### செவி நோய்.

1. இந் நூலின் முதல் அத்தியாயத்தில் விவரித்தப்படி நோய்க் குறிப்பேட்டுக்கு வேண்டிய வரலாறுகளை முதல்முதலாகக் காது நோயாளியை முறையாக வினவி எழுதிக்கொள்ளல் வேண் டும்.

2. நோயாளி கூறும் நோய்ப் பட்டியலை ஒன்றுவிடாமல் எழுதிக்கொண்டு அவை ஏற்பட்ட காலத்தின் அடிப்படையில் வரிசைப்படுத்தி வைக்கவேண்டும்.

3. பொதுக் கண்ணோட்டம்.—*(1)* காதின் அளவு, *(2)* காதின் உருவம், *(3)* ஒரு காது மற்றதற்கு ஒத்த உருவில் உள்ளதா? மாறுபட்டுள்ளதா? அதன் காரணம், *(4)* காது குத்தப்பட்டுள்ளதா? காது குத்திய இடத்தில் தடித்த ஊன் வளர்ச்சி காணப்படுகின்றதா? காது குத்திய துவாரம் நாளடைவில் தூர்ந்து குத்திய வடு மட்டும் காண்கின்றதா? *(5)* வெளிக் காது தடித்துள்ளதா? *(6)* ஒரு காது மற்றதற்கு

நிறத்தில் மாறுபட்டுள்ளதா? (7) காதுகளில் பிறவியிலேயே மூளிகள் ஏற்பட்டுள்ளதா? (8) அடிப்பட்டதாலோ மற்ற வன்முறையாலோ வெளிக் காது கிழிவு பட்டு அல்லது முழுமையாக அழிவுண்டுள்ளதா? என்ற விவரங்களை பொதுவாகப் பார்வையிட்டுக் கண்டுபிடித்த உண்மைகளைக் குறித்தல் வேண்டும். இவ்வண்ணமே காதின் சந்தையும் கூடியவரை வெயில் வெளிச்சத்தில் பார்வையிட்டு அதன் ஆழம், பரிமாணம், காதினுள்ளிருக்கும் குறும்பி—அதன் நிறம், அளவு, இளகலாக உள்ளதா? கடினமாகக் கல்போன்று உள்ளதா? என்னும் விவரங்களைப் பார்த்து குறிப்பெடுக்க வேண்டும். காதில் சந்தின் வழியே நீர், குருதி, சீழ்ப் போன்ற திரவப் பொருள் வருவதாயின் அதன் அளவு, நிறம், மணம் முதலியவைகளைக் குறிப்பிடல் வேண்டும். காதின் சந்தின் மறு முனையில் உள்ள காதின் ஜவ்வு உள்ள நிலையையும் பொறுமையாகப் பார்வையிட்டுப் பார்த்துக் குறிப்பிட வேண்டும்.

4 வெளிக் காதில் வீக்கம், பரு, பிளவை, கரப்பான், எழிச்சி, விப்புருதி, ஊன் வளர்ச்சி, படை, சொறி முதலியவை காணப்பட்டால் அவைகளை இந் நூலின் அத்தியாயம் 2, 3-ல் கூறியுள்ளபடி பரிசோதித்துக் குறிப்பு எழுத வேண்டும்.

5. காதின் சந்து வழியே வெளிப்புறமாக வளர்ந்து வரும் திடத்த மாமிச வளர்ச்சி ஏதேனும் காணப்படின் அதன் நிறம், கனம், நீளம், உருவம் மெத்தென்று உள்ளதா கடினமாக உள்ளதா, அதிலிருந்து ஏதேனும் கசிவு ஏற்பட்டு ஒழுகுகின்றதா என்பவைகளைப் பார்த்து குறிப்பு வரைதல் வேண்டும். மற்றும் அவ்வகை வளர்ச்சிகளின் வெப்பதட்ப நிலை, காம்பில் ஒட்டியது போல உள்ளதா அல்லது ஏகாண்டமாக காதின் சந்தை முழுமையும் அடைத்துக் கொண்டுள்ளதா? அது அழுகிய தன்மையுடன் உள்ளதா என்பவை போன்ற விஷயங்களைப் பரிசோதித்து குறிப்பெடுத்தல் வேண்டும்.

6. காதுகளின் அண்மையில் உள்ள தலை, முகம், பிடறி, கன்னம், கீழ்த்தாடை, மேல்தாடை. பல்லடிப் பாகம், தொண்டை, மிடறு முதலிய இடங்களில்—வலி, குத்தல், வீக்கம், உரோம உதிர்வு, செயலிழப்பு போன்ற குறி குணங்கள் காணப்படின் அவைகளையும் எழுதிக்கொள்ளல் வேண்டும்.

7. உள்காதில் ஏற்பட்ட சீழ், வெளிக்காது வழியாய் வருவது மட்டுமன்றி தொண்டையில் இறங்கி வயிற்றுக்கும் போவதாய் உள்ளதா என்பதையும் பரீட்சித்துப் பார்த்து குறிப்பு வரைதல் வேண்டும்.

8. காது நோயாளனுக்கு அயர்வு, தலைசுற்றல், மயக்கம், மூர்ச்சை, வியர்த்தல், நடுக்கம், தள்ளாடல் போன்ற குறிகள் உள்ளதாகக் காணின் அவைகளையும் குறித்துக்கொள்ளல் வேண்டும்.

**9.** காது செவிடுபட்டிருந்தால், ஒரு காது செவிடு பட்டுள்ளதா இரண்டுமே செவிடாகி உள்ளதா? நோயாளி பேசும் ஆற்றலை இழந்துள்ளானா என்பதையும் பரீட்சித்து குறித்துக் கொள்ளல் வேண்டும். காது செவிடும் ஊமைத்தன்மையும் பிறவியிலேயே ஏற்பட்டிருப்பது சகஜம். ஆனால், நன்றாகக் கேட்டுக்கொண்டிருந்த காது ஆவரூன காது சிகிச்சையால் செவிடுபட்டு வாய்ப் பேச்சும் இன்றி ஊமையான சில காது நோயாளிகள் உண்டு.

*10.* காது நோயாளிக்கும் எண்வகைத் தேர்வும், உடற் கட்டின் பரிசோதனையும் செய்து குறித்தல் மிக்க அவசியமாகும்.

# அத்தியாயம் XVIII.

## மூக்கு நோய்.

*1.* இந் நூலின் முதல் அத்தியாயத்தில் கூறியபடி மூக்கு நோயினை வினவி அவனுடைய தற்கால நோயின் வரலாறு, பழைய நோய் வரலாறு, குடும்ப வரலாற்றுடன் தன் சுய சரித்திரம் ஆகியவைகளைக் குறிப்பெடுத்தல் வேண்டும்.

*2.* நோயாளி கூறும் நோய்ப்பட்டியலை, அது ஏற்பட்ட காலக் கட்டத்துடன் குறிப்பெடுத்தல் வேண்டும். உதாரணமாக ஒரு நாள் முழுமையும் அடுக்கடுக்காகத் தும்மல் ஏற்பட்டிருக்கலாம். மறுநாள் தொடங்கி நீர்ப்பீநசம் ஏற்பட்டிருக்கலாம்.

*3.* **பொதுக் கண்ணோட்டம் :—***(1)* மூக்கின் அளவு, *(2)* மூக்கின் பொதுத் தோற்றம், *(3)* உருவம், *(4)* மூக்கு துவாரங்கள் ஒத்த அளவாய் உள்ளதா? *(5)* எந்த பக்கத்து துவாரம் சிறுத்துள்ளது, *(6)* மூக்கின் கூரையின் நடுவில் குழிந்துள்ளதா, *(7)* மூக்கின் நடுவிலுள்ள சுவர் நொடித்துக் கொண்டுள்ளதா? சரியானபடி உள்ளதா? *(8)* மூக்கின் நுனி கூர்மையாக உள்ளதா? சப்பையாக உள்ளதா? *(9)* பிறவியிலேயே மூக்கில் கிழிவு பட்டமாதிரி அவயக் கோளாறு உண்டா? *(10)* மூக்கை அழுத்திவிட்டது போல உள்ளதா? என்பவை போன்ற குறிப்புகளைப் பார்வையிட்டும் நோயாளியை வினவியும் குறிப்பு எடுத்தல் வேண்டும்.

*4.* மூக்கு குத்தப்பட்டுள்ளதா? இருபுறமும் நடுச் சுவரின் கீழ்ப்பாகம் ஆகிய இடங்களில் குத்தப்பட்டிருப்பதுண்டு. குத்தப் பட்ட துவாரம் உள்ளதா? தூர்ந்துள்ளதா? மூக்கு குத்தப் பட்டதன் தொடர்பாக அதன் அருகில் தடிப்போ ஊன் வளர்ச்சியோ ஏற்பட்டுள்ளதா? பருக்கள், எழுச்சிகள், கொப்புளங்கள், சொறிகள், வங்கு அல்லது தேமல், கட்டிகள், வன்முறைத் தாக்குதல்களால் உண்டான காயங்கள் காணப்படின் அவைகளை அத்தியாயம் 2, 3-ல் கூறிய முறைப்படி பரிசோதித்து குறிப்பில் எழுதல் வேண்டும்.

5. மூக்கின் துளைகளின் வழியே கசியும் அல்லது வெளியாகும் நீர்ப்பொருள்.—சளி, சீழ், இரத்தம் முதலியவைகளின் அளவு, நிறம், மணம் முதலிய விவரங்களைக் கண்டு குறிப்பெடுத்துக் கொள்ளவேண்டும். மூக்கிலிருந்து சில சமயம் செதிள் போல வும், புண்ணில் ஏற்பட்ட பக்கு அல்லது பொருக்குகள் போன்ற பொருட்கள் வெளியாகக் கூடும். அதையும் பார்வையிட்டு கடினமாக உள்ளதா? எளிதில் தூளாக வல்லதாய் உள்ளதா—அவைகளின் நிறம், மணம், அளவு முதலியவைகளைக் குறிப்பெடுத் தல் வேண்டும். மூக்கிலிருந்து, வெளியாகும் மூச்சுக் காற்று துர்நாற்றத்துடன் உள்ளதா ? என்பதை முகர்ந்தும், தூங்கும் போது குறட்டை விட்டுத் தூங்குவதுண்டா என்று வினவியும் குறிப்பு எடுத்தல் வேண்டும்.

6. மூக்கின் உள்ளிருந்து ஊன் போன்ற திடமான வளர்ச்சி வளர்ந்து மூக்குத் துவாரத்தின் வழியாக வெளியில் காணப் பட்டால் அதன் வண்ணம், அளவு, உருவம், மெத்தென்றோ கடினமாகவோ உள்ள தன்மை, இயக்கம், காம்பில் ஒட்டிய மாதிரி உள்ளதா? அல்லது ஏகாண்டத்துக்கு வளர்ந்துள்ளதா? அது பற்றியுள்ள இடம்—மூக்குத் துவாரங்களின் உள் ஓரங்கள் அல்லது நடுச் சுவர் முதலிய விவரங்களைப் பார்த்தும் பரி சோதித்தும் குறிக்க வேண்டும். அவ்வகை வளர்ச்சியால் தும்மல், கொட்டாவி, கடின சுவாசம் முதலியவைகளில் ஏதேனும் உண்டாவதுண்டா எனக் கேட்டுக் குறிப்பெடுத்தல் வேண்டும். வளர்ச்சியுள்ள மூக்குத் துவாரம் முழுமையும் அடைபட்டு மூச்சி யக்கம் ஒரே மூக்குத் துவாரம் வழியே நடை பெறுகின்றதா என்பதையும் பரீட்சித்து எழுதல் வேண்டும்.

7. தலை, நெற்றி, புருவ மையம், மேலண்ணம், தாடைகள், கன்னங்கள், கண்கள், காதுகள், தொண்டை, உள் நாக்கு மிடறு, புறங்கழுத்து ஆகிய இடங்களிலும், மூக்கின் அண்மையிலுள்ள முகத்தின் பக்கங்களிலும் மூக்கு நோயால் உண்டாகிக் காணக் கூடிய இயல்புக்கு மாறுபட்ட குறி குணங்கள்—வலி, எரிவு, கனப்பு, அடைப்பு, குத்தல் ஆகியவற்றை வினவியும் பரிசோதித்தும் பார்த்து குறிப்பு வரைதல் வேண்டும்.

8. மூக்குத் துவாரங்களில் வீக்கம், புண், பரு முதலிய வை காணப்பட்டால் அவைகளையும், மூக்கின் வெளிப்பரப்புகளில் காணப்பட்ட பரு, கட்டி, கழலை, தடிப்பு, கரப்பான் புண் முதலியவை தோன்றி இருப்பின் அவைகளையும் இந் நூலின் அத்தியாயம் 2, 3-ல் விவரித்த வண்ணம் பரிசோதனை செய்து குறிப்பெடுத்தல் வேண்டும்.

9. மூக்கின் வாசனை அறியும் ஆற்றலைப் பரிசோதித்துக் குறிப்பு வரைதல் வேண்டும். எந்நேரமும் மிக்க மணமுள்ளதும் நெடியுள்ளதுமான பொருட்களை முகரும் பழக்கம் உண்டா என்று நோயாளியைக் கேட்டு அறிந்து குறிப்பெடுத்தல் வேண் டும். அவ்வாறு முகருபவர்களுக்குக் கண்பார்வைக் கோளறு தலைவலி, தலைசுற்றல், தூக்கமின்மை, குமட்டல், வாந்தி, தும்மல்

இருமல். ஊண் வெறுப்பு, கண்ணீர் வடிதல், மூக்கில் நீர் வடிதல், இரத்தம் வடிதல் போன்ற குறிகள் காணப்படக்கூடும். அவைகளைப் பற்றியும் வினவிக் குறித்தல் வேண்டும். சிலருக்கு வெறுப்பூட்டும் துர்நாற்றமுள்ள பொருள்களை முகர நேர்ந்தால் மேற்படி குறிகுணங்களில் ஏதேனும் ஒன்றோ பலவோ தோன்றக் கூடும். அதையும் வினவிக் குறிப்பிடல் வேண்டும். உதாரணமாக பிரேத பரிசோதனை செய்யும் மருத்துவர்களுக்கு இத்தகைய குறிகுணங்களில் ஒன்றோ பலவோ ஏற்படக்கூடும்.

*10.* மூச்சு இயங்கும் போது, மூக்கின் தசைப்பாகம் வேகமாக விரிவதும் சுருங்குவதுமான இயக்கம் கொண்டுள்ளதா என்பதைப் பார்த்துக் குறிப்பிடல் வேண்டும்.

*11.* மூக்குநோயாளிக்கு, மயக்கம், அயர்ச்சி, நடுக்கல், தள்ளாடல், காய்ச்சல், பேதி, பசிமந்தம், முதலிய பிணிகள் உண்டென்றால் அவைகளையும் முறைப்படி பரிசோதித்துக் குறிப்பெடுத்தல் வெண்டும்.

*12.* ஒவ்வொரு நோயாளிக்கும் செய்வது போல இந் நோயாளிக்கும் எண்வகைத் தேர்வும், ஏழு உடற்கட்டுகளின் பரிசோதனையையும் செய்து குறிப்பில் எழுதல் வேண்டும்.

*13.* மூக்கு நோயாளி பேசும் விதத்தைக் கூர்ந்து கவனித்து குறிப்பு வரைதல் வேண்டும்.

## அத்தியாயம் XIX.

### வாய் நோய்கள்.

1. முதலாவதாக வாய் நோயுடைய பிணியாளனை வினவி தற்போது உண்டாகியுள்ள பிணியின் வரலாறு, பழைய நோய்களின் வரலாறு, குடும்ப வரலாறு பழக்க வழக்கங்களுடன் அவனுடைய சுய சரிதை முதலானவைகளையும் அவன் கூறும் நோய்ப்பட்டியலையும் முறையாக ஒன்றுவிடாமல் குறிப்பு எடுத்தல் வேண்டும் (இதன் விவரம் இந் நூலின் முதல் அத்தியாயத்தில் விளக்கப்பட்டுள்ளது).

2. **பொதுக் கண்ணோட்டம்.** —*(1)* உதடுகளின் தோற்றம்— இயல்பாக உள்ளனவா? பருத்து உள்ளனவா ? சிறுத்து உள்ளனவா ? பிளவு பட்டுள்ளதா? *(2)* மேலுதடும் கீழுதடும் ஒன்றையொன்று இயல்பாக அண்மி உள்ளனவா ? ஒன்றோடொன்று சேராமல் விலகி உள்ளனவா? அதாவது உதடுகளின் இடையே இடைவெளி எப்போதும் உள்ளதா? *(3)* உதடுகள் நேருக்கு நேராக இல்லாமல் ஒரு பக்கம் உந்தப்பட்டுள்ளனவா? *(4)* இரு உதடுகளுக்கும் இடையே பற்கள் புகுந்து வெளியே எட்டிப் பார்க்கின்றனவா? அப்படி எட்டிப் பார்க்கும் பல் ஒன்றா பலவா? *(5)* கீழுதடு உள்ளடங்கியும் மேலுதடு முன்னுக்குத் தள்ளியபடி, கீழுதட்டை மூடிக்கொண்டுள்ளதா? *(6)* அல்லது

மேலுதடு மேலுக்குத் தள்ளப்பட்டும் கீழுதடு முன்னுக்குத் தள்ளியும் முன்புறமாக கீழ் நோக்கிக் கவிழ்ந்தும் காண்கின்றதா? (7) வாயின்கோணங்கள்—இரு உதடுகளும் இணையும் இடங்கள்—இயல்பாக உள்ளனவா ? அகன்றுள்ளனவா ? குறுகி உள்ளனவா? (8) உதட்டின் வெளிப்பாகம் செம்பவள நிறத்துடன் காணப்படுகின்றதா ? வெளிறி உள்ளதா? வேறு நிறங்கள்—பச்சை, இளநீலம், கறுப்பு, சங்கு போன்ற வெண்ணிறம்— காண்கின்றனவா ? (9) உதட்டின் மேல் பற்கள் அழுத்திய பள்ளங்கள் காண்கின்றனவா? எந்த உதட்டில் அவை காண்கின்றன ?

3. உதடு இயல்பாக மெத்தென்று உள்ளதா ? கடினமாக உள்ளதா? உதடுகள் இயல்பாக இன்றி சுரசுரப்பாக உள்ளதா? வெடிப்புகள், புரை, புண்கள், பருக்கள், எழுச்சிகள், படை, சொறி முதலியவைகளில் ஏதேனும் ஒன்ரோ பலவோ காணப்படின் அவைகளை இந் நூலின் அத்தியாயம் 2, 3-ல் கூறியபடி பரிசோதித்துக் கண்ட உண்மைகளைக் குறித்துக் கொள்ளல் வேண்டும்.

4. வாயின் கோணங்களில் நிற மாற்றம், நீர்க்கசிவு, ஊண் வளர்ச்சி முதலியவை காணப்பட்டால் அவைகளையும் முறைப்படி பரிசோதித்து குறிப்பு எழுதல் வேண்டும்.

5. உதடுகளின் உட்புறம் இயல்பான வண்ணத்துடன் வழுவழுப்பாகவும், மினுமினுப்பாகவும் உள்ளதா? எனப் பார்வையிட்டு அதன் தோற்றத்தையும் மாற்றம் கண்டால் அதையும் குறிப்பிடல் வேண்டும். உதட்டின் உட்புறத்தில் உண்டாகியுள்ள புண், தசை வளர்ச்சி, கட்டி, புரை, எழுச்சி, பரு முதலியவைகளையும் பரிசோதித்துக் குறிப்பில் பதிதல் வேண்டும்.

6. வாய்நோயாளி பேசும் விதம், சாப்பிடும் விதம், உதட்டைக் குவித்து ஊதும் ஆற்றல், இரு உதடுகளையும் சேர்த்து ஒரு பொருளைப் பற்றும் ஆற்றல் முதலியவைகளைப் பரிசோதித்து குறிப்பு எழுதல் வேண்டும்.

7. வாய்க்குள் உள்ள ஈறு, பற்கள், நா, கீழ்த்தாடை, மேல் தாடை, கன்னம், உள்நாக்கு, அண்ணம், தொண்டை முதலிய பாகங்களையும் பரிசோதித்துக் காணப்படும் குறி குணங்களையும், வாய்க்கு அண்மையிலுள்ள முகத்தின் பாகங்களையும் முகத்திலுள்ள மற்ற உறுப்புகள், தலை, காது, புறங்கழுத்து முன் கழுத்து முதலிய பாகங்களையும் முறைப்படி பரிசோதித்துக் காணும் குறி குணங்களைப் பதிதல் வேண்டும்.

8. எண் வகைத் தேர்வும் உடற்கட்டுகளின் பரிசோதனைகளையும் செய்து குறிப்பிட வேண்டும்.

# அத்தியாயம் XX.

## நாக்கு நோய்.

1. இந் நூலின் முதல் அத்தியாயத்தில் விளக்கியுள்ளபடிநோய்க் குறிப்பேட்டில் முறையாக வினவி தற்காலம் உண்டாகியுள்ள நாவின் பிணியின் வரலாறு, சிறு பிராயத்திலிருந்து தற்காலம் வரை ஏற்பட்ட பிணிகளின் வரலாறு, குடும்ப வரலாற்றுடன் நோயாளியின் பழக்க வழக்கங்களும் அடங்கிய சுயசரிதை ஆகியவற்றைக் கேட்டு, நோயாளி தரும் பதில்களை எழுதல் வேண்டும். நோயாளி கூறும் நோய் அல்லது நோய்களின் பட்டியலை முறைப்படி ஒன்றுவிடாமல் குறித்துக்கொள்ளல் வேண்டும். முன்னல் தோன்றிய நோயை முன்னும் அடுத்துத் தோன்றிய நோயை அதன் பின்னும் குறிப்பிடுதலே முறையாம் என்க.

2. பொதுக் கண்ணேட்டம்.—*(1)* நாவின் தோற்றம்—இயல்பாக உள்ளதா ? மாறுபட்டுள்ளதா? *(2)* நாவின் நிறம், *(3)* நாவின் மேற்புறம் சுத்தமாக உள்ளதா? மாவு படிந்தாற் போல உள்ளதா, சுரசுரப்பாகவும் வரண்டும் உள்ளதா? வழு வழுப்பாக நீர்ப்பசையுடன் உள்ளதா? *(3)* நாவின் ஓரங்களும் நுனியும் இயல்பாக உள்ளதா ? பற்களின் அழுத்த அடையாளங்கள் காணப்படுகின்றனவா? *(4)* நாவின் இயக்கம் இயல்பாக உள்ளதா? மாறுபட்டு உள்ளதா? *(5)* நாவை வெளியே நீட்டும் போது அதன் திசையில் மாற்றங்கள் காண்கின்றனவா? *(6)* நாவை மடித்து ஒலிக்கும்படி ஊதும் ஆற்றல் உள்ளதா? இல்லையா? *(7)* நாவில் வெடிப்பு அல்லது பிளவுகள் உள்ளனவா? *(8)* நாவின் அடியிலுள்ள ஐவ்வின் பிடிப்பு நுனிநாவின் நுனிவரையும் உள்ளதா? இல்லையா? சிலருக்குப் பிறவியிலேயே இந்த ஜவ்வு நுனி நாவின் நுனிவரை பற்றி இருத்தல் உண்டு. அப்படிப்பட்ட நாவை மேலுக்கு எழுப்புதலும், வெளியே நீட்டுதலும் மற்ற இயக்கங்களைச் செய்யவும் இயலாது. அத்தகையவனுக்கு பேச்சே சரியாக வராது. பெரும்பாலும் ஊமைபோல இருத்தலும் கூடும். (உளறுவாயனுக இருக்கக்கூடும் என்க).

3. நாவின் சுவையறியும் ஆற்றலும் பேச்சாற்றலும் இயல்பாக உள்ளதா? மாறுபட்டுள்ளதா? (திக்குவாய் போன்றவை) என்பதைப் பரிசோதித்து குறிப்பு எழுதல் வேண்டும்.

4. நாவில் எழுச்சி, கட்டி, பரு, சிலந்தி, கிரந்தி, அரணை முதலியவை காணப்படுமாயின் அவைகளை இந் நூலின் அத்தியாயம் 2, 3-ல் விவரித்துள்ளபடி பரிசோதனை செய்து குறிப்பெடுத்தல் வேண்டும்.

5. நாவின் அடிப்பாகம், கீழ்த்தாடை, நாவீன் அடியில் கீழ்த்தாடையிலுள்ள உமிழ்நீர்ச் சுரப்பிகள் கன்னங்களினுட் பாகத்திலுள்ள உமிழ்நீர் சுரப்பிகள், கன்னம், அண்ணம், அடிநா, உள் நாக்கு, தொண்டை, மிடறு, சோற்றுக் குழாய் முதலியவைகளில் காணப்படும் குறி குணங்களைப் பரிசோதித்து குறிப்பிடல் வேண்டும்.

6. நாக்கு நோயாளியின் உடலில் க்ஷயம், பாண்டு, காமாலே, குன்மம் முதலான நோய்கள் ஏதேனும் ஒன்று ஏற்கனவே உள்ளதா என்பதைப் பரீட்சித்து அறிதல் வேண்டும்.

7. நாக்கு நோயாளிக்கு ஊண் வெறுப்பு, பசியின்மை, மல பந்தம், அயர்ச்சி, நடுக்கம், மயக்கம் முதலான குறிகள் உண்டா? என்பதையும் வினவியும், பரிசோதித்தும் பார்த்துக் குறிப்பில் எழுதி வைக்க வேண்டும்.

8. எண்வகைத் தேர்வுகளேயும், ஏழு உடற்கட்டுகளின் பரி சோதனேகளேயும் செய்து குறிப்பில் பதித்தல் வேண்டும்.

# அத்தியாயம் XXI.

## பல் நோய்.

*1.* இந் நூலின் முதல் அத்தியாயத்தில் விவரித்தபடி நோயாளியை வினவி நோய்க் குறிப்பேட்டில் தற்போதைய நோயின் வரலாறு பழைய நோய்களின் வரலாறு, சுயசரிதம் முதலியவைகளேக் குறித்தல் வேண்டும்.

2. பொதுக் கண்ணேட்டம். —(அ) பற்களின் எண்ணிக்கை, (ஆ) பற்களின் அளவு—மிக்க நீளமாக உள்ளதா குட்டையாக உள்ளதா? இயல்பாக உள்ளதா? (இ) பற்களின் நிறம், (ஈ) பற்களின் தன்மை—உறுதி, எளிதில் உடையும் தன்மை, தேய்வு, சொத்தை, ஆடுந்தன்மை முதலியன, (உ) பல்லீறுகளின் நிறம், உறுதி, தன்மை—கரைந்து போதல், கனத்துக் காணல் முதலிய வைகளேப் பார்த்து குறிப்பெடுத்தல் வேண்டும், (ஊ) பல்லின் மேலும் அழுக்கு படிந்திருத்தல், உறுதியாகக் காரை படிந்த பல்லுடன் பற்றியிருத்தல் முதலியவைகளேக் குறிப்பிடல்வேண்டும். (எ) பற்களின் இடைவெளிமிகுதியாக உள்ளதா? இயல்பாக உள்ளதா? என்பதைக் குறிப்பிடல் வேண்டும், (ஏ) பல்லீறை அழுத்தும்போது பல்லடியிலிருந்து சீழ் அல்லது இரத்தம் பொசி கின்றதா என்பதையும் குறிப்பிட வேண்டும், (ஐ) மேல்வரிசைப் பற்களும் கீழ்வரிசைப்பற்களும் நேர்நேராக உள்ளதா? இல்லேயா என்பதைப் பார்க்க வேண்டும், (ஒ) மேல் தாடை உள்ளுக்குத் தள்ளியும் கீழ்த்தாடைமுன்னுக்கு நகர்ந்தும் பிறவியிலேயே இருந்தால் அதையும் குறிப்பிட வேண்டும்.

3. பற்களின் அடிப்பாகத்தில் எப்போதும் வேதனே உள்ளதா? மெல்லும்போது மட்டும் வலி ஏற்படுகின்றதா? அவ்வலி ஒரே பல்லின் அடியில் மட்டும் ஏற்படுகின்றதா, எத்தனே பற்களின் அடியில் அப்படிப்பட்ட வேதனே ஏற்படுகின்றது? பல் கூசல், குளிர்ந்த நீர், புளிப்புச் சுவை படும் காலத்தில் ஏற்படுகின்றதா? இல்லேயா? இனிப்பு மிக்க பொருளே மெல்லும் போது பல்கூசுதல் ஏற்படுகின்றதா? எல்லா பற்களுக்கும் ஏற்படு கின்றதா? அல்லது ஒரு பல்லில் மட்டும் ஏற்படுகின்றதா? சாப்பிடும் போது கன்னத்தின் உட்பக்கம் பற்களின் மத்தியில் மாட்டிக்கொண்டு கடிபட்டு புண்ணுகின்றதா? எனக்கேட்டு குறிப்பு எடுத்தல் வேண்டும்.

4. பல்லடியில் வீக்கம், பரு, எழுச்சி, தடிப்பு, பல்லரணை, ஊன் வளர்ச்சி முதலியவை காணப்படினும், புண்கள் காணப் படினும் அவைகளை இந் நூலின் அத்தியாயம் 2, 3-ல் விளக்கிய படி பரிசோதித்து குறிப்பு எடுத்தல் வேண்டும்.

5. பற்களின் அண்மையிலுள்ள உறுப்புகள், முகம், தலை, முதலியவைகளிலுள்ள கண், காது, மூக்கு முதலிய உறுப்புகளில் காணும் குறிகுணங்களையும் தொண்டை, மிடறு, பிடறி, முன் கழுத்து முதலிய பாகங்களில் காணப்படும் குறிகுணங்களையும் குறித்துக்கொள்ள வேண்டும்.

6. நோயாளியின் சீரண உறுப்புகளில் காணப்படும் குறி குணங்களையும் அவைகளில் காணும் நோய்களையும் பரிசோதித்து அவைளின் குறிகுணங்களையும் குறித்துக்கொள்ளல் வேண்டும்.

7. பல் நோயாளியின், உடல் உரத்தைப் போக்கச் செய்யும் பிணிகளாகிய கயம், பாண்டு, காமாலை, கிராணி போன்றவை ஏற்கனவே ஏற்பட்டுள்ளதா? என்று பரிசோதித்துக் குறிப்பு எடுத்தல் வேண்டும்.

8. எண்வகைத் தேர்வுகளையும் உடற்கட்டின் பரிசோதனை களையும் சித்தர் நூல்களில் கூறியுள்ளபடி தேர்ந்து குறித்தல் வேண்டும்.

## அத்தியாயம் XXII.

### கண் நோய்கள்.

1. இந் நூலில் முதல் அத்தியாயத்தில் விவரித்த வண்ணம் கண் பிணியாளனை வினவி மூன்று வகைப்பட்ட வரலாறுகளையும் அவன்கூறும் நோய் அல்லது நோய்களையும் வரிசைப்படி குறித்தல் வேண்டும். தன் கண்ணில் தோன்றி யுள்ள அதே பிணி தன் நெருங்கிய உறவினர்களுக்குத் தோன்றி யுள்ளதா எனக் கேட்டுக் குறிப்பில் எழுதி வைக்க வேண்டும்.

2. பொதுக் கண்ணோட்டம்—(அ) கண்கள். — இரண்டு கண்களும் ஒத்த அளவுடன் உள்ளனவா? மாறுபட்டிருப்பின் எக்கண்ணில் எப்பாகம் மாறுபட்டுள்ளது? கண்கள் உட்குழிந்துள்ளனவா? கண்கள் மேட்டு விழிகளாக உள்ளனவா? கண்கள் பெரியவையாக உள்ளனவா? சிறியவையாகத் தோற்ற மளிக்கின்றனவா? கண்களின் அசைவு இயல்பாக எல்லாத் திசை களிலும் உள்ளனவா? கண் பிணியாளன் தலையை அசைக்காம லும் திருப்பாமலும் கண்ணை மட்டும் சுழற்றக்கூடிய ஆற்றல் உடையவனாக உள்ளானா? மூடிக் கொண்டுள்ள கண்களை இலேசாக அழுத்திப் பரிசோதிக்கும் போது அவை மிருதுவாயும் மெத் தென்று சற்று அழுந்த வல்லதாய் உள்ளனவா? அல்லது, கடினமாயும் அழுந்தாமலும் இருக்கின்றனவா? ஒரு கண் இயல்பாகவும், மற்றதில் கண்போன்ற செயற்கைக் கண்,

விழி நீக்கப்பட்ட குழியில் பதிக்கப்பட்டுள்ளதா? என்பதையும் அக்கண் நீங்கிய அல்லது நீக்கப்பட்ட வரலாற்றையும் குறித்துக்கொள்ளல் வேண்டும். கண்ணின் கருவிழி ஒன்றுக்கொன்று மாறுபட்ட திசைகளில் இயங்குந் தன்மையுடையனவாய் உள்ளனவா? ஒத்த இயக்கம் உடையனவாய் உள்ளனவா?

(ஆ) புருவம்.—தோற்றம், நீளம், மயிரின் நீளம், வண்ணம், மயிர் உதிரும் தன்மை, மயிரின் அடர்த்தி, பழைய காய வடு—அடிபட்டதோ, கட்டி வந்து ஆறியதோ அல்லது கழலையை அறுவை செய்ததனுலோ ஏற்பட்ட காரணத்துடன்—தற்போது அதில் கண்டுள்ள புழுவெட்டு, மயிர் முழுதும் உதிர்ந்து மீண்டும் முளைக்காமல் இருக்கும் நிலை முதலிய குறிகுணங்களைப் பரிசோதித்துக் குறிப்பிடல் வேண்டும். மற்றும், அவ்விடங்களில் கட்டி, தடிப்பு, எழுச்சி, பரு, ஊன்வளர்ச்சி, புண்கள் முதலியவைகள் காணப்படின் அவைகளை இந்நூலின் அத்தியாயம் 2, 3-ல் கூறப்பட்ட வண்ணம் பரிசோதித்துக் குறிப்பு எடுத்தல் வேண்டும்.

(இ) கண்ணின் இமை குவளை.— தோற்றம். — கண்ணை மூடும் போது இமையும் குவளையும் சரியானபடி பொருந்துவதாய் உள்ளதா? அரைப்பங்கு மூடியவண்ணம் அல்லது திறந்த வண்ணமாகவும் உள்ளதா? அவ்வகைக் குறிகுணம் ஒரே கண்ணில் காண்கின்றதா? இருகண்களிலும் காண்கின்றதா? கண்களை முழுமையாகத் திறக்க இயலுகின்றதா? இல்லையா? கண்களை முழுமையாக விழிக்க இயலாதபடி உள்ள காரணத்தால் முகத்தை உயர்த்திப் பார்க்க வேண்டியுள்ளதா ? இமை, குவளை முதலியவைகளின் உட்புறம் வழுவழுப்பாக உள்ளதா? சுரசுரப்பாக உள்ளதா? இமை, குவளை முதலியவைகளின் ஓரத்தில் வளைவு, குழிவு, சுருக்கம், திருகல் முதலியவைகள் காணப்பட்டால் அவைகளின் இடம், அளவு முதலியவைகளைக் குறிப்பிடல் வேண்டும். இமை, குவளை முதலியவைகளின் ஓரத்தில் உட்புறமாகவோ வெளிப்புறமாகவோ, கட்டி, வீக்கம், சுரப்பு, கனப்பு, வெடிப்பு, கொப்புளங்கள், எழுச்சிகள், அழுகல் முதலியவை தோன்றியுள்ளனவா என்றும், குவளை, இமை முதலியவைகளில் ஏகாண்டமாக வீக்கம், தடிப்பு, எழுச்சி, கட்டி முதலியவை காணப்படின் அவைகளின் பரிசோதனையையும் முன்பத்தியில் கூறப்பட்டபடி பரிசோதனை செய்து குறிப்பு எழுதல் வேண்டும். கண்ணிமைக்கும் கால அளவை ஒழுங்காக உள்ளதா? மந்தமாகவோ விரைவாகவோ உள்ளதா? என்பதைக் குறிப்பு எடுத்தல் வேண்டும். கண்ணிமையில் கனப்பு அடிக்கடி காணும்போது அக்கனத்த பாகத்தில் செந்நிறமும், வெப்பமும் காண்பதோடு, குளிர்ச் சுரம் அடிக்கடி காணப்படுகின்றதா என வினவிக் குறிப்பு எடுத்தல் வேண்டும். தூங்கி விழிக்கும் போது கண்ணிமைகள் ஒட்டிக் கொள்கின்றனவா? இமை, குவளைப் பாகங்களில் தினவு காண்கின்றதா ? குத்தல், வலி, எரிச்சல் போன்ற குறிகுணங்கள் உண்டாகியுள்ளதா? என்று குறிப்பெடுத்தல் வேண்டும்.

**கண்ணிமை, குவளை மயிர்.**—கண்ணிமை, குவளை ஆகியவைகளில் உள்ள மயிர் ஒத்த வரிசையில் இயல்பாக உள்ளதா? உட்புறமாக வளைந்துள்ளதா? எத்தனை மயிர் அவ்வண்ணம் வளைவு கொண்டுள்ளது? இமை, குவளை மயிரின் நீளம் வண்ணம், தோற்றம், இமை மயிர் இன்மை, இமை மயிர் உதிர்வு முதலிய குறிகுணங்களைக் குறிப்பெடுத்தல் வேண்டும்.

**கடைக் கண்கள், தோற்றம்.**— வண்ணம், அழுக்கு அல்லது மலினம் செறியும் அளவு, அதன் நிறம் முதலியவைகளைப் பார்த்துக் குறிப்பெடுத்தல் வேண்டும். கடைக்கண்ணில் காணக்கூடிய வீக்கம், தசைவளர்ச்சி, அவைகளின் வண்ணம், வளர்ந்து பரவி வரும் இடம், திசை, கனம் முதலியவைகளைக் குறிப்பில் எழுதல் வேண்டும்.

**வெள்விழி.**— அளவு, நிறம் முதலியவை இயல்பாக உள்ளதா? கருவிழியின் பரிமாணத்துக்கு வெள்விழியின் பரிமாணம் இயல்பாக உள்ளதா? மாறுபட்ட நிலைக் கொடியாகப் வெள்விழி சிவந்தும், இரத்த நரம்புகள் கொடிப்படுகின்றதா? பின்னிக்கொண்டும் புடைத்துக்கொண்டும் காணப்படுகின்றதா? வெள்விழியில் குறு, எழிச்சி, புண் முதலியவை காணப்படுகின்றனவா? (புண், எழுச்சி முதல்யவைகளை முன்னமே கூறியபடி பரிசோதித்துக் குறிப்புகள் எழுதல் வேண்டும்) வெள்விழி வழுவழுப்பாகவும், மினுமினுப்பாகவும் உள்ளதா? அல்லது மினுமினுப்பு குறைந்து, வரண்டு சுரசுரப்பாக உள்ளதா? என்னும் குறிகுணங்களைப் பரிசோதித்து எழுதிக் கொள்ளல் வேண்டும்.

**கருவிழி.**—தோற்றம், பரிமாணம் குறித்தல் வேண்டும். சிலருக்குக் கருவிழி கருப்பாக இல்லாமல் தேனின் நிறம் பெற்று காணப்படுதல் உண்டு. அதனைப் பூனைக் கண் அல்லது தேன்விழி என்று கூறுவார். கருவிழி, வெள்விழியின் பரிமாணத்துக்குப் பாதியளவே இருத்தல் இயல்பு. அவ்வாறின்றி கருவிழியின் பரிமாணம் மிகுந்தோ சுருங்கியோ இருப்பின் அதைக் குறிப்பிடல் வேண்டும். கருவிழியின் ஓரத்தில் சாம்பல் நிற வட்டம் ஏற்பட்டுள்ளதாயின் அதனையும் குறித்தல் வேண்டும். கருவிழி வெளுத்துக்காணின் அதன் பரிமாணத்தையும் உருவத்தையும் குறிப்பிடல் வேண்டும். கருவிழியின்மேல், தசை வளர்ந்து படர்தல், குறு, எழுச்சி, புண் முதலியவை காணப்பட்டால் அவைகளை முறைப்படி பரிசோதித்துக் குறிப்பெடுத்தல் வேண்டும். கருவிழி முழுமையாகச் சிவந்தும் அல்லது அதில் சிவப்பு, கருப்பு, வெண்மை ஆகிய புள்ளிகள் தோன்றுமாயின் அவைகளின் எண்ணிக்கை, இடம், பரப்பு முதலியவைகளைக் குறித்துக் கொள்ளல் வேண்டும்.

கருவிழி ஒளி ஊடுறுவலைத் தடுக்கக்கூடிய வெண்ணிறம் பெற்றுள்ளதா என்பதையும் பரிசோதித்துக் குறிப்பிடல் வேண்டும். கருவிழியில் செந்நிறத் தசை வளர்ச்சியும்

உறுத்தலும் காணப்படின் அதையும் குறித்துக்கொள்ளல் வேண்டும். கருவிழியின் ஊடே குருதித் தேக்கம் காணப்படின் அதனையும் அளவு முதலிய விவரங்களுடன் குறித்தல் வேண்டும்.

**தாரை அல்லது ஜோதி அல்லது பாவை** (பாப்பா) : இது இயல்பாக கருவிழியின் நடுவில் கருவிழிக்கு ஏழில் ஒரு பங்கு பரிமாணமுடையதாக இருத்தல் வேண்டும். இது இருக்கும் இடமும் பரிமாணமும் மாற்றம் அடைந்து காணப்பட்டால் அதனைக் குறிப்பிடல் வேண்டும். இது மிகுந்த ஒளியில் சுருங்கியும், குறைந்த ஒளியில் விரிந்தும், செயல்படும் இயல்பான தன்மை கொண்டுள்ளதா? அவ்வியல்பு மந்தமுற்றோ இல்லாமலோ காணப்படுகின்றதா என்பதைப் பரீட்சித்துக் குறிப்பில் எழுத வேண்டும். தாரை சரியான வட்டவடிவில் உள்ளதா? அல்லது மாறியுள்ளதா என்றும் பார்த்து குறித்தல் வேண்டும். கண்ணைப் பரிசோதிப்பவரின் உருவம் தெளிவாகப் பாவையில் பிரதிபலிக்கிறதா? எனப் பார்த்துக் குறித்தல் வேண்டும். பாவையில் வண்ண மாற்றங்களுடன் திரையிட்டது போன்று மறைப்புத்தரும் வளர்ச்சி காண்கின்றனவா? பாவையில் வெண் புள்ளி ஒன்றோ பலவோ காண்கின்றனவா? என்பவைகளைப் பரிசோதித்துக் குறிப்பு வரைதல் வேண்டும்.

**கண்ணின் சூழல்.**—கண்ணைச் சுற்றி சொறி, பரு, எழுச்சி, சிறு சீழ்க்கொப்புளங்கள், வீக்கம், தடிப்பு, ஊன் வளர்ச்சி முதலியவை தோன்றி இருப்பின் அவைகளையும் முறைப்படி பரிசோதித்துக் குறிப்பெடுத்தல் வேண்டும்.

**கண் பார்வை.**—கண் பிணியாளனுக்குப் பார்வை இயல்பாக உள்ளதா? அல்லது தூரப் பார்வை, கிட்டப் பார்வை, மாலைக்கண் போன்ற பார்வைக் கோளாறு உள்ளதாயின் அவைகளைக் கண்டுபிடித்துக் குறிப்பிடல் வேண்டும். இவ்வகைப் பார்வைக் கோளாறுகளைத் ''திமிரம்'' என்பர் சித்தர் நூலார். சிலருக்கு மிகுந்த ஒளியில் கண் பார்வை மங்கியும், மங்கிய ஒளியில் தெளிந்த பார்வையும் காணப்படுதல் உண்டு. சிலருக்குப் பார்க்கும் போது ஒவ்வொரு பொருளும் இரண்டிரண்டாகத் தெரிதலும் உண்டு. சிலருக்குக் ''கருடப் பார்வை'' ஏற்பட்டு இருப்பின், ஒரு விழி ஒரு புறமும் மற்றது வேறு புறமும் இடம் பெயர்ந்து நின்றே பார்க்க வேண்டி இருக்கும். இதனைக் காக்கைக் கண் என்பாரும் உளர். அவர்கள் அண்மையிலுள்ளவனைச் சேய்மையிலுள்ளவனைப் பார்த்தல் போல தலையையும் விழியையும் திருப்பிப் பார்ப்பார். சேய்மையிலுள்ளவனை அண்மையிலுள்ளவனைப் பார்ப்பவர்போலத் தலையையும் விழிகளையும் திருப்பிப் பார்ப்பார். இக்குறிகளையும் பரிசோதித்து வரைதல் வேண்டும்.

**கண்களில் காணும் குறி குணங்கள்.**—கண் பிணியாளருக்குக் கண்ணெரிச்சல், கண் குத்தல், கண் உறுத்தல், கண்கூசல், கண் புகைச்சல், பார்வை மயக்கம், கண்ணீர் வடிதல், சீழ்போன்ற

நீர் அல்லது குருதி வண்ணத்தில் கண்ணீர் வடிதல், குருதியே வடிதல் போன்ற குறிகுணங்கள் காணப்படும். அவைகளைப் பற்றித் தக்கப்படி வினவிக் குறித்தல் வேண்டும்.

கண்களை அடுத்துள்ள பாகங்களிலும், நெற்றி, உச்சி, மூக்கு முதலிய பாகங்களில் தோன்றும் குறிகுணங்களைக் கேட்டும் பரிசோதித்தும் எழுதுதல் வேண்டும்.

மற்றும் கண் பிணியாளனுக்கு ஒற்றைத் தலைவலி, வாந்தி, முதலிய குறிகுணங்களும், சிலருக்குப் படிக்கும்போதும் தையல் வேலை செய்யும் போதும் மிகுதியாகக் கண்ணீர் பாய்வதுடன், தலைவலி உண்டாவதும் உண்டு. அவைகளையும் கவனமாய்க் கண்டுபிடித்துக் குறித்தல் வேண்டும்.

கண் பிணியாளனுக்குக் குஷ்டம், க்ஷயம், காமாலை, பாண்டு, இரத்த அழுத்தம் முதலிய பிணியில் ஏதேனும் ஏற்கெனவே உண்டாகி உள்ளதாயின் அதனையும் குறிப்பிடல் வேண்டும்.

கண் பார்வை இழந்த தன்மை பிறவியிலேயே பலருக்கு உண்டாவது உண்டு. சிலருக்குப் பிறந்தவுடன் உண்டாகும். கண்ணோயை உடனடியாகத் தீர்க்காத காரணத்தால் சிறு பிராயத்திலிருந்தே கண் பார்வை போய்விடும். சிலருக்கு மின்னல் ஒளியாலும், கண்விழிக்குள் வன் முறைத் தாக்குதலாலும், பெரியம்மை நோயாலும் கண்பார்வை முற்றிலும் மறைந்துவிடும். குட்டப் பிணியிலும், நீரிழிவுப் பிணியிலும் கண் நரம்பு வலுவிழந்து ஒளியிழத்தலும் உண்டு. அதனைப் பரிசோதித்துக் குறிப்பில் பதித்தல் வேண்டும்.

எண்வகைத் தேர்வுகளையும் எழுவகை உடற்கட்டுகளின் பரிசோதனையையும் செய்து நோய்க் குறிப்பேட்டில் குறித்தல் வேண்டும்.

முதற் பதிப்பு : 1979.

©
தமிழ்நாடு அரசு